# MADURAI SEED

## A.S.கார்த்திக்பாரதி M.A., M.Phil., - V.இளவரசி M.Sc.,

# திருமண விழா மலர்

வெளியீடு : புதுயுகம் குழந்தைகள் இதழ் : 13
புதிய வெளிச்சங்கள் இளைஞர் இதழ் : 5



A.அர்ச்சுணன்-K.சண்முகத்தம்மாள்



S.விசி - N.வடிவேல்



ஈஸ்வர் இந்திரா மகால், நல்லாகுளம்
15.11.2009, ஞாயிற்றுக்கிழமை

எங்கள் இல்ல மணவிழாவிற்கு வருகை தந்து
சிறப்பித்த அனைவருக்கும் நன்றி
- மதுரை சீடு குடும்பத்தினர்



A.கலைச்செல்வி B.E.
V.பாரிகணேசன் B.E.

2009–2010 ஆம் ஆண்டில் மட்டும்
சீடு உறுப்பினர்கள், நண்பர்கள்,
உறவினர்களின் 11 திருமண விழாக்கள்
சிறப்பாக நடந்துள்ளன.
இச்சூழலில் திருமண விழா மலர்
வெளிவருவதில் பெருமகிழ்ச்சி
அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

C.அருண்குமார் B.A.
மலர்க்குழு



K.ஜெயந்தி B.E.
S.சந்திரமோகன் M.Sc.,



மணமகனின்
அண்ணி P.உமாராணி
அண்ணன் A.S.விமலன்



மணமகனின் திருமணத்தை
சாத்தியமாக்கியோர்

நிற்பவர் (இடமிருந்து) P.உமாராணி அண்ணி
A.S.வேலுமணி அக்கா
கீழ் அமர்ந்திருப்பவர்கள் (இடமிருந்து)
A.S.மஞ்சுளா தங்கை
A.S.விஜயா அக்கா
A.S.செல்வி அக்கா
மெல்லி அக்கா
Laura Amma - John Sir
Evelin Amma
Ann Amma
அண்ணன் முத்துகுமார்
தம்பி பாரிகணேசன்
தம்பி மன்சூர்
தம்பி சந்திரமோகன்
தம்பி கண்ணன்
தம்பி மகுடபதி
தம்பி அன்பரசு
மாப்பிள்ளை அருண்குமார்
மதுரை சீடு முன்னாள், இந்நாள் தொண்டர்கள்
தோழி இளவரசி



மின் நிலை : அர்ச்சகனர் இல்லம், திருச்சி



மணமகள் குடும்பத்தினர்

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி, ஆதிமூலம்பிள்ளை – நாகம்மாள்
(வாழ்ந்து மறைந்தது தல்லாகுளம்) அவர்களின் மகன்வழிப் பேரனும்,
விருதுநகர் மாவட்டம், புலியூரான், கந்தசாமிபிள்ளை – அம்மாபிள்ளை
அவர்களின் மகள்வழிப் பேரனும்,
மதுரை, தல்லாகுளம், ஆ.அர்ச்சுனன்பிள்ளை – சண்முகத்தம்மாள்
(வாழ்ந்து மறைந்தது கரும்பாலை)
ஆறாவது புதல்வனுமாகிய திருநிறைச்செல்வன்

## அ.ச.கார்த்திக்பாரதி

நிறுவுநர் : மதுரை சீடு

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை , நாகலிங்கம் பிள்ளை –
சரஸ்வதியம்மாள் அவர்களின் மகன்வழிப் பேரனும்,
சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி , சேவுகரத்தினம்பிள்ளை–
பார்வதியம்மாள் அவர்களின் மகள்வழிப் பேத்தியும்,
திருவண்ணாமலை, வடிவேல்பிள்ளை – விஜிஅம்மாள் அவர்களின்
மூத்த புதல்வியுமாகிய திருநிறைச்செல்வி

## வ.இளவரசி

ஆகியோரது திருமணத்தின் போது

**மதுரை, தல்லாகுளம் ஈஸ்வர் இந்திரா மகாலில்**

**15.11.2009 ஞாயிற்றுக்கிழமை** அன்று

இத்திருமண விழா மலர் வெளியிடப்பெற்றது.



செந்நீர்ப் பொதுவினைச் செம்மல் மூதூர்த்
தமது செய் வாழ்க்கையின் இனியது உண்டோ?

– நற்றிணை

அருள்மிகு திரௌபதியம்மன் & அழகர் ஐயா திருவருளுடன்

**மன்றல் விழா**

# திருமணத் திருமுகம்

நெஞ்சில் நிறைந்தோரே,
வணக்கம்.

மதுரை கரும்பாலை கட்டடக் கலைஞர்
ஆ.அர்ச்சுனன் பிள்ளை - சண்முகத்தம்மாள் இணையரின்
திருமகன்

**கார்த்திக்பாரதி** க்கும்

திருவண்ணாமலை மெதுரொட்டி வல்லுநர்
நா. வடிவேல் பிள்ளை - விஜி அம்மாள் இணையரின்
திருமகள்

**இளவரசி** க்கும்

பண்பமை பெரியோரால் மணவுறுதி செய்யப்பட்டு

நிகழும் திருவள்ளுவராண்டு 2040
ஐப்பசித்திங்கள் 29-ஆம் நாளன்று (15.11.09)
காலை 10.00 மணிக்கு
மதுரை தல்லாகுளம் ஈசுவர் இந்திரா திருமண மன்றத்தில்
மத்தளங்கள் கொட்ட
ஆன்றோர் சான்றோர் ஆசிகளுடன்
தமிழர்தம் திருமுறை நெறிவழி
வதுவை விழா இனிதே நிகழ்வுறும்.
அவ்வமயம் மன்றத்திற்கு
மனம் கனிந்த வாழ்த்துக்களை
ஏந்தி வருக.
கைத்தலம் பற்றும் மணநாளில்
அன்பான நீங்கள்
உடனிருக்க வேண்டும்.
தங்களின் வரவும் வாழ்த்தும்
மிகமிக அவசியம்.
மறக்க இயலா இனியநாளைத் தர உள்ள
தங்களுக்காக காத்திருக்கும்...

**அ.ச.வீமன்**
**வீ. உமாராணி**
மதுரை.

**க.செல்வம்**
**செ.உமா**
சிங்கம்புணரி

# மதுரை சீடு-ல் திருமண விழாக்கள்

| தொகுப்பு : M.மன்சூர்அலி | | | மணமகன் கார்த்திக்பாரதியின் உறவு |
|---|---|---|---|
| S.சந்திரமோகன்<br>K.ஜெயந்தி | 22.1.10 | KSKR மண்டபம்<br>செல்லூர் | தம்பி<br>பால்ய நண்பன்<br>சீடு ஆதரவாளர் |
| P.இராஜேஸ்கண்ணன்<br>K.மீனாட்சி | 17.1.10 | சுப்பு மஹால்<br>செல்லூர் | நண்பர், புதுயுகம்<br>அச்சிடுவோர்<br>சீடு ஆதரவாளர் |
| A.S.கார்த்திக்பாரதி<br>V.இளவரசி | 15.11.09 | ஈஸ்வர் இந்திரா மஹால்,<br>தல்லாகுளம் | |
| P.ஹரிகிருஷ்ணன்<br>J.மீனாட்சி | 25.10.09 | புதுகுடி மண்டபம்<br>தல்லாகுளம் | பெரியப்பா மகன்<br>அண்ணன் |
| V.P.பாரிகணேசன்<br>A.கலைச்செல்வி | 30.8.09 | ஸ்டார் பார்க்<br>அண்ணாநகர் | பால்ய நண்பன்<br>சகோதரன், சீடு ஆதரவாளர் |
| K.N.சந்திரன்<br>C.லோகேஸ்வரி | 23.8.09 | திருப்பரங்குன்றம் | பால்ய நண்பன்<br>சகோதரன் |
| P.இராதாகிருஷ்ணன்<br>S.மாரியம்மாள் | 4.6.09 | காளி அம்மன் கோவில்<br>தென்காசி | சீடு தொண்டர்<br>தம்பி |
| N.நாகலெட்சுமி<br>N.ராஜாகண்ணு | 4.6.09 | புதுகுடி மண்டபம்<br>தல்லாகுளம் | சீடு முன்னாள் மாணவி<br>தங்கை |
| P.பாண்டியம்மாள்<br>M.ராஜ்குமார் | 3.6.09 | கிருத்திகை முருகன்<br>கோவில், நாமக்கல் | சீடு முன்னாள்<br>மாணவி & தொண்டர் |
| K.M.கண்ணன்<br>R.சுசீலா | 28.5.09 | பெருமாள்கோவில்<br>தல்லாகுளம் | பெரியப்பா மகன்<br>தம்பி |
| கணேஷ்பாபு<br>பிரியா | 28.5.09 | மதனகோபாலசுவாமி<br>திருக்கோவில், மதுரை | சீடு முன்னாள்<br>மாணவர், தொண்டர் |
| M.உத்தண்டகாளியப்பன்<br>S.நிர்மலா | 28.5.09 | செல்லியம்மன்<br>கோவில், புலியூரான் | நண்பர் |
| J.ஜான்பிரெளனி<br>J.லிசா ஜெரலின் ஸ்மைலி | 7.5.09 | லூர்து மாதா தேவாலயம்<br>K.புதூர் | கல்லூரித்தோழர்<br>சீடு தொண்டர் |

## முதல் வகுப்பு ஆசிரியரின் முதல் வாழ்த்து

என்னிடம் முதலாம் வகுப்பு பயின்ற மாணவன் கார்த்திக் பாரதிக்கு திருமண நல்வாழ்த்துகள் மணமக்கள் இருவரும் ஒரு மனமாய் இணைந்து அனைத்து செல்வங்களும் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்தும்

ஏ. சேச்சி ஆசிரியை

## ஒன்றன் கூர்ஆடை உடுப்பவரே யாயினும் ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை

இருமனங்கள் ஒருமனமாகும்
திருமண நாளிது
**இந்நந்நாளில்**
இளவல் தன்னுடனே
**இளவரசி** கைப்பற்றி
வாழ்க்கைப் படகேறி
வலம்வரவே புறப்பட்டீர்!
கற்பாறை உராய்ந்தாலும்
பொற்பாவை உடனிருந்தால்
வன்பாறையும் மென்மலராகுமன்றோ
**பாரதி.**
செல்லரிக்கும் மானிட வாழ்வில்
பொல்லன தவிர்த்து நல்லன ஆற்றி
செம்புலப் பெயல் நீரார்
செம்மொழிபோல் வாழ்ந்திடுவீர்!
இல்லறமே நல்லறமாம்
இல்லாளை வசமாக்கி
அன்றிலின் அன்பையே
அடைக்கலப் பொருளாக்கிடுக.
அழியாத முத்தமிழாய்
அடங்காத அகப்பொருளாய்
செழிப்பாக வாழ்ந்திட்டு
செல்வங்கள் பலபெற்று
இன்பமே எந்நாளும்
இணையராய் வாழ்ந்திடுக!



மாணவ மைந்தனின் மணநாளில்
மனங்குளிர வாழ்த்திடும்
உன் அன்பிற்கிணை
ஆசிரியை
**S.சாந்தி**
(மணமகனின் 6, 8, 9, 10ஆம் வகுப்பு தமிழாசிரியை)

# ஓ இந்த வாழ்க்கை

காந்தியவாதி
ஜெயபிரகாஷ் நாராயணன்

*போய் வருகிறேன்
ஓ இந்த வாழ்க்கை தோல்விகளின் தொகுப்பு இது
வெற்றிக்கனி என் கைக்கு நேராக ஆடிய போதும்
என் பாதையில் வராதே என்று நானே தட்டிவிட்டேன்
அறியாமையா நான் செய்தது? இல்லை
வெற்றியெது தோல்வியெது
என் அகராதியில் அந்த வார்த்தைகளுக்கு அர்த்தங்களே வேறு வேறு
நான் புரட்சியை தேடுகின்ற வேட்டைக்காரன்
ஒரு தனிப்பாதை போட வேண்டும்
அதை தனித்திசையில் போட வேண்டும்
தியாகத்தின் பாதை, உழைப்பின் பாதை
பயனுள்ள பணிகளின் பாதை
ஒரு முழு புரட்சிக்கான பாதை அது
என் தோல்விகளை சொல்லிப் பிதற்றுகிறவர்களே
அவை எனது லட்சிய தேடல்களாகும்
எனது தேடல்கள் அதிகம் ஐயா
என் இலட்சியமும் வெகுதூரத்தில் இருக்கிறது
ஓ எவ்வளவு தடைகள் வந்தால் என்ன
என்னால் எங்கும் இளைப்பாற முடியாது
எனக்கென்று ஆசைகள் எதுவுமில்லை
எல்லாம் என் லட்சியத்திற்காக
அரப்பணிக்கப்பட்டு விட்டன ஆகையால்
என் தோல்விகளிலும் நான் மனநிறைவடைகிறேன்
இன்றைய இந்த பயனற்ற வாழ்வு
நூறு மடங்கு பயனுள்ளதாகிவிடும் என்னைப் போல சிந்திக்கிற
என் அன்புள்ள இளைஞர்களுக்கு
எனக்கு நேர்ந்ததைப் போல
இடையூறு எதுவும் இல்லாது போனால்
கொஞ்சமாவது அவர்கள் வாழ்வு எளிமையானால்
என் வாழ்க்கையும் நூறு மடங்கு பயனுள்ளதாகிவிடும்.*

## மணமகள் வழி சொந்தங்கள்

தாத்தா-பாட்டிமார்

| | |
|---|---|
| த.வ.சுப்பிரமணி - ராஜராஜேஸ்வரி | திண்டுக்கல் |
| மு.தனசேகரன் - அங்கம்மாள் | நத்தம் |
| மு.முத்தையா - சிவகாமி | கொட்டாம்பட்டி |
| K.சிதம்பரம் - வேணி | பொன்னமராவதி |
| வேலு - இந்திரா | பொன்னமராவதி |

மாமன்மார்

| | |
|---|---|
| D.செல்வம் - லில்லி | சிங்கம்புணரி |
| M.முரளி - மீனாட்சி | திண்டுக்கல் |
| M.சுரேஷ் | திண்டுக்கல் |
| M.தீபக் சக்ரவர்த்தி | திண்டுக்கல் |
| C.காமாட்சி | பொன்னமராவதி |
| C.காசி - செல்வி | பொன்னமராவதி |
| C.ஆறுமுகம் | பொன்னமராவதி |

சித்தி-சித்தப்பாமார்கள்

K.கீதா - N.குமார்
S.உமா - K.செல்வம்
S.சுதா

தம்பி, தங்கைகள்

K.கபிலன்
S.ஜெயசூர்யா
S.ஜெயமீனாட்சி

## மணமகன் வழி சொந்தங்கள்

தாய்மாமன்

| | |
|---|---|
| K.பழனிபிள்ளை - தமயந்தி, கோமதியம்மாள் | விராட்டிபத்து |

மாமன்-அத்தைமார்

| | |
|---|---|
| S.சிதம்பரம்பிள்ளை - பிச்சையம்மாள் | புலியூரான் |
| S.முனியாண்டிபிள்ளை - தேவியம்மாள் | புலியூரான் |
| S.பாக்கியம்பிள்ளை - விஜயா அம்மாள் | புலியூரான் |

பெரியப்பா-பெரியம்மாமார்கள்

| | |
|---|---|
| V.முத்துராமலிங்கம்பிள்ளை - பஞ்சவர்ணத்தம்மாள் | அவனியாபுரம் |
| A.கருத்தபாண்டிபிள்ளை - நாகலெட்சுமிஅம்மாள் | தல்லாகுளம் |

மாமனார்-மாமிமார்

| | |
|---|---|
| அருணாச்சலம் பிள்ளை - பெரியாச்சியம்மாள் | புலியூரான் |
| S.இராஜமாணிக்கம்பிள்ளை - பொன்னம்மாள் தலையாரி | குருநாதர்கோவில் |
| முருகன்பிள்ளை - மாரியம்மாள் | வடக்குமாசிவீதி, மதுரை |
| வடிவேல்பிள்ளை - விஜியம்மாள் | திருவண்ணாமலை |

அக்கா-மாமன்மார்

| | |
|---|---|
| P.ஜானகி - ஐயப்பன் | போடி |
| P.மைதிலி - இராஜா | ஐராவதநல்லூர் |
| M.கன்னிகா ஆசிரியை - வைரவசுந்தரம் | அவனியாபுரம் |
| M.கிருஷ்ணவேணி - மோகனசுந்தரம் | மதுரை |

<u>உடன் பிறந்த அக்காக்கள் மற்றும் மாமன்மார்</u>

A.S.விஜயலெட்சுமி - A.வீரபத்திரன் ராமலிங்கா மில்ஸ் புலியூரான்
A.S.செல்வி - R.இரமேஷ் பந்தல் காண்ட்ராக்டர் தெற்குமாசிவீதி
A.S.வேல்மணி - M.நாகேந்திரன் ஐஸ்வர்யா காபி பார் வடக்குமாசி வீதி

<u>தங்கைகள்-மச்சினன்</u>

A.S.மஞ்சுளா - R.செந்தில்குமார் RSK போட்டோகிராபர் தெற்குமாசி வீதி
K.கிருஷ்ணவேணி B.Sc. - அண்ணாத்துரை ஐராவதநல்லூர்
P.சரண்யாதேவி B.Sc. மீனாட்சி கல்லூரி
M.அமுதா B.A. மீனாட்சி கல்லூரி
N.நாகலெட்சுமி-ராஜாகண்ணு, C.கற்பகஜோதி B.A.,M.தங்கலெட்சுமிB.A.,P.சரவணப்பிரியா ஆசிரியை

<u>அக்காக்கள்</u>

Dr.மெல்லியல் அண்ணாமலை அமெரிக்கா
Kristen Akka USA
Heena Akka சென்னை

<u>அண்ணன்-அண்ணிமார்</u>

P.ரவிச்சந்திரன் டிரைவர் - மீனாட்சி தல்லாகுளம்
P.ஹரிச்சந்திரன் - மீனாட்சி தல்லாகுளம்
M.பாலன்-சுலோக்சனா அவனியாபுரம்
M.விஜயன்-ஜெகதாம்பாள் அவனியாபுரம்
M.ஆனந்தன் - ரத்தினம் அவனியாபுரம்

<u>உடன் பிறந்த அண்ணன் மற்றும் அண்ணிமார்</u>

A.S.வீமன் - உமாராணி அர்ஜுன் சண்முகா பில்டிங் கன்ஸ்ட்ரக்சன்

<u>உடன் பிறந்த தம்பி</u>

A.S.மணிமுருகன் பெயிண்டிங் காண்ட்ராக்டர் மலேசியா

<u>நண்பர்கள் & சகோதரர்கள்</u>

S.முத்துக்குமார் M.A. - M.காயத்ரி Ph.D. சிநேகம், மதுரை
U.கௌதமன் Ph.D., - பிரியா M.Sc., M.Phil., சண்டீகர்
M.உத்தண்ட காளியப்பன் - நிர்மலா புலியூரான்
K.M.கண்ணன் கிரானைட் கட்டர் - சுசீலா கரும்பாலை
S.சந்திரமோகன் BE - K.ஜெயந்தி BE சென்னை
V.P.பாரிகணேசன் BE - A.கலைசெல்வி BE அமெரிக்கா
K.N.சந்திரன் B.Sc.,-லோகேஸ்வரி B.A. சிங்கப்பூர்
M.மன்சூர்அலி B.Sc. - முஸ்தகிம் மதுரை
K.அன்பரசன் M.A. நிலக்கோட்டை
C.அருண்குமார் B.A. மதுரை சீடு
G.சுரேஷ்குமார் M.Sc., K.கணேஷ்குமார் M.S.W., M.Phil., சென்னை

மணவிழா பங்கேற்பில் இணையும் உள்ளங்கள்
Dr.ஆடம்ஸ் - சீடு கல்வி மையங்களின் தந்தை
V..மாரியம்மாள் மற்றும் பள்ளி, கல்லூரி பேராசிரியர்கள்

<u>தாய்மாமன் வீட்டு சொந்தங்கள்</u>

S.D.சின்னத்தம்பியாபிள்ளை - சரஸ்வதியம்மாள் கீரைத்துறை
P.இராஜேஸ்வரி - ரவிச்சந்திரன் கீரைத்துறை
P.இராஜசேகர் - சீதா திருப்பூர்
P.உமாராணி - வீமன் கரும்பாலை
P.வசந்தி - ராஜா விராட்டிபத்து
P.மாலதி - செந்தில்குமார் பார்த்திபனூர்
P.சுரேஷ்குமார் - மலர் ஜெய்ஹிந்த்புரம்
P.சோபனாதேவி BBA விராட்டிபத்து

# MADURAI SEED BOARD OF TRUSTEES


| | | | |
|---|---|---|---|
| Managing Trustee | : | A.S.Karthikbharathi | |
| Financial Trustee | : | K.Anbarasan | |
| Trustee | : | V.Mariyammal | |
| | | | |
| Director | : | M.Mansurali | |
| Children Coordinator | : | O.Mohan | |
| Young People Coordinator | : | C.Arunkumar | |
| Advisory Board & Friends | : | Dr. Taj Rajappa | Andra |
| | | Dr. Melly Annamalai, | USA |
| | | Dr. Laura Villiger, | Switzerland |
| | | Dr. Johnpotts | Switzerland |
| | | Dr. Evelin Masilamani | Switzerland |
| Friends of Madurai Seed - Members, | | | Switzerland |
| | | Dr. Annamalai, | USA |
| | | Mr. Biju | Madurai |
| | | Prof. Prabhakar | Madurai |
| | | Dr. Madavan | Madurai |
| | | Dr. Evanjaline Manokaran | Madurai |
| | | Prof. Babucharles | Madurai |
| | | Mrs. Heena Nandhini | Chennai |
| | | Dr. Gowthaman | Chandighar |
| | | Mr. Chandramohan | Chennai |
| | | Er. Parriganesan | USA |
| | | Er. Arulthangaraj | Dubai |
| | | Dr. Nagarajan, | Canada |
| | | Mr.Muthukumar | Madurai |




அருள்மிகு திரௌபதியம்மன் கோவில். திருச்சுழி

## மதுரை சீடு-ன் பெருமைக்குரிய தொண்டர்கள்



| | | | |
|---|---|---|---|
| பிரௌனி | சுரேஷ்குமார் | வான்மதி | மெஹராஜ் |
| மகேஸ்வரி | பிரகாஷ் | ஜான்சி | சுந்தர் |
| வனிதா | அன்பழகன் | மகாலெட்சுமி | மனோஜ் |
| மீனாட்சி காவல்துறை | பழனிவேல்ராஜன் | விசாலாட்சி | ஆபிதாபேகம் |
| செந்தில் முக்குளம் | முத்துக்குமார் | அருண்பிரசாத் | மாரியம்மாள் |
| சக்திவேல் | அஜ்மிர் | பாலமுருகன் | ஜமீலா பேகம் |
| கணேஷ் | ஜான் | அருண் | ஈஸ்வரி |
| கௌதம் | அரிஹரன் | சிவக்குமார் | கனகவள்ளி |
| | | | சரவணன் |



ஸ்ரீ திரௌபதியம்மன் திருக்கல்யாணம், திருச்சுழி

## தேனினும் இனிய நற்றமிழில் பெயர்சூட்டி தமிழை சுவைப்போம்

## ஆண் குழந்தை பெயர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| அகவழகன் | அருளரசன் | அருட்செல்வன் | அருளரசு | அமிழ்தன் |
| அமுதன் | அரங்கன் | அரசு | அண்ணாத்துரை | அதியமான் |
| அரியநாயகம் | அருட்கோ | அருள்நம்பி | அருள்நெஞ்சன் | அருளப்பன் |
| அருளாளன் | அருண்மொழி | அருளன் | அவைஅஞ்சான் | அறிவுக்கனி |
| அறிவுச்சுடர் | அறிவழகன் | அறிவரசு | அறிவொளி | அறவாணன் |
| அறிவுக்கலை | அறிவுநம்பி | அம்மையப்பன் | அன்புவாணன் | அன்பாளன் |
| அன்பழகன் | அன்புமதி | அன்பொளி | அன்புக்கதிர் | ஆடலரசன் |
| ஆடலழகன் | ஆடற்கோ | ஆடவல்லான் | ஆதியப்பன் | ஆதிபகவன் |
| ஆதிமுதல்வன் | ஆராவமுதன் | ஆரூரான் | ஆற்றலரசு | ஆடலரசு |
| இசையரசு | இசைச்செல்வன் | இயற்கைவாணன் | இலக்கியன் | இளங்கதிர் |
| இளங்குமரன் | இளம்பரிதி | இளம்வழுதி | இளங்கீரன் | இளங்கோ |
| இனியன் | இன்பன் | இளவழகன் | இளங்குமணன் | இளமாறன் |
| இரும்பொறை | இளமுருகன் | இளவேனில் | இசைவாணன் | இசைவேந்தன் |
| இசைநம்பி | இசைக்கோ | இளந்தமிழன் | இளந்தேவன் | இன்றமிழன் |
| இளவரசன் | இளந்தென்றல் | இளவரசு | இன்பவாணன் | இறைவன் |
| இறைநம்பி | ஈழநலம்கொண்டான் | ஈழவேந்தன் | ஈழத்தரசு | ஈழமாறன் |
| ஈழவாணன் | ஈகையன் | உயிரோவியன் | உலகப்பன் | உலகமுதல்வன் |
| உலகன் | உணர்வரசன் | உலகைவென்றவன் | உலகமணி | எண்குணத்தான் |
| எல்லன் | எழுஞாயிறு | எழில்முதல்வன் | எழிலரசன் | எழிலழகன்எழினி |
| எழில்மலை | எழிசைமன்னன் | ஏழிசைப்பாமகன் | ஏழிசைவேந்தன் | ஏறுநடையோன் |
| ஐயாறப்பன் | ஐயம்பெருமான் | ஒளியவன் | ஒட்டக்கூத்தன் | ஓவியன் |
| ஓரி | கடம்பன் | கங்கைகொண்டான் | கடிகைமுத்து | கடுமான்கிள்ளி |
| கண்ணப்பன் | கண்மணி | கண்ணாயிரம் | கணியன்பூங்குன்றன் | கதிரவன் |
| கதிர்வேல் | கதிர்மதி | கதிர்வாணன் | கதிர்மொழி | கதிர்ச்செல்வன் |
| கதிரழகன் | கபிலன் | கம்பன் | கயல்விழிநாடன் | கருங்குயிலன் |
| கல்விச்செல்வன் | கல்லாடன் | கலையரசன் | கலைமுகிலன் | கலைவாணன் |
| கலையமுதன் | கலைக்கோ | கலைவேந்தன் | கலைச்செல்வன் | கலையழகன் |
| கலைமதி | கலைச்செழியன் | கலைஞன் | கலைநம்பி | கவினன் |
| கரிகாலன் | காஞ்சிவேந்தன் | காவலன் | காரி | கார்மேனி |
| காரிக்கண்ணன் | காத்தமுத்து | காராளன் | கார்வேந்தன் | கிள்ளிவளவன் |
| கீரன் | குடக்கோ | குடிலன் | குணவழகன் | குணவீரன் |
| குணவீரபாண்டியன் | குமணன் | குறன் | குமரகுருபரன் | குமரிநாடன் |
| குமரிவேந்தன் | குமரிக்கண்டன் | குறட்கோ | குறளமுதன் | குறள்நெறியன் |
| குறளன்பன் | குள்ளாலன் | குறிஞ்சிக்கோ | குறிஞ்சிநாடன் | குறிஞ்சித்தேவன் |
| குன்றன் | கூர்மதி | கொன்றைவேந்தன் | கொள்கைமறவன் | கொற்கைப்பாண்டியன் |
| கோப்பெருஞ்சோழன் | கோவேந்தன் | கோமகன் | கோவைவாணன் | கோதைமார்பன் |
| கோதைமாறன் | கோதைச்செல்வன் | சந்தனன் | சாத்தன் | சாந்தையாசித்தன் |
| சித்திரன் | சித்திரச்செல்வன் | சித்திரவேல் | சிந்தனைச்செல்வன் | சிலம்பரசன் |
| சிற்றரசு | சிற்றம்பலன் | சிவக்குமரன் | சிவமாறன் | சின்னையன் |
| சின்னக்கண்ணன் | சீத்தலைச்சாத்தன் | சீர்விழியன் | சீராளன் | சுடர்மணி |
| சுடர்வேந்தன் | சூடாமணி | செங்கதிர்வாணன் | செங்கனியன் | செங்குட்டுவன் |
| செங்குன்றன் | செங்கீரன் | செங்கோ | செந்தாமரை | செல்வன் |
| செல்வமணி | சேக்கிழான் | சொற்கோ | சோழவேந்தன் | தங்கப்பன் |
| தங்கவேல் | தஞ்சைவாணன் | தண்மதியன் | தமிழரசன் | தமிழழகன் |
| தமிழ்க்கதிர் | தமிழ்க்கனல் | தமிழ்மகன் | தமிழ்நெஞ்சன் | தமிழ்க்குடிமகன் |
| தமிழ்மாறன் | தமிழ்ச்சேரவன் | தமிழ்க்கோ | தனித்தமிழன் | தமிழன்பன் |
| தமிழ்மணி | தமிழ்வேங்கை | தமிழ்வேள் | தமிழமுதன் | தமிழ்விழியன் |
| தங்கமணி | தமிழ்நேயன் | தமிழ்ப்பரிதி | தமிழகன் | தமிழவன் |
| தமிழ்வாணன் | தமிழினியன் | தமிழ்வளவன் | தமிழாளன் | தமிழொளி |
| தமிழ்வென்றி | தமிழ்க்குமரன் | தமிழ்ச்செல்வன் | தமிழ்த்தென்றல் | தமிழ்மல்லன் |
| தாயுமானவன் | தாமரைச்செல்வன் | தாமரைக்கண்ணன் | தாளமுத்து | தாமரைநெஞ்சன் |
| தாமரைக்கோ | தாமரையான் | திருச்செல்வன் | திருச்சிற்றம்பலவாணன் | திருநீலகண்டன் |

| | | | | |
|---|---|---|---|---|
| திருப்பாணாழ்வார் | திருமகன் | திருமலை | திருமால் | திருமாவளவன் |
| திருமூலன் | திருமுருகன் | திருவரசன் | திருவள்ளுவன் | திருநாவுக்கரசன் |
| திருவரங்கன் | திடவரசன் | திருவளர்நம்பி | தில்லையழகன் | தில்லைவாணன் |
| தீந்தமிழன் | தீந்தமிழ்ச்செல்வன் | துரை | துரையரசன் | துரையவன் |
| தூயவன் | தூமணி | தென்கோ | தென்மொழி | தென்றமிழ்வாணன் |
| தென்னவன் | தென்னவர்கோ | தென்னரசன் | தேவநேயன் | தேனப்பன் |
| தேனமிழ்தன் | தேனமுதன் | தேவமைந்தன் | தொண்டைமான் | தொல்காப்பியன் |
| தோன்றல் | தோழன் | தைமகன் | நக்கீரன் | நகைமுகன் |
| நச்சினார்க்கினியன் | நடவரசன் | நந்தன் | நம்பிகுட்டுவன் | நல்லாதன் |
| நலங்கிள்ளி | நல்லக்கண்ணன் | நல்லமுத்து | நல்லப்பன் | நள்ளி |
| நல்லியக்கோடன் | நன்மாறன் | நன்னன் | நற்பண்பாளன் | நல்லையன் |
| நல்லகண்ணு | நற்றமிழன் | நாகரிகன் | நாகமணி | நாவரசன் |
| நாவேந்தன் | நாகப்பன் | நாவுக்கரசன் | நாயகன் | நிலவரசன் |
| நிலவழகன் | நிலாமணி | நிறையின்பன் | நிறைமொழியன் | நிறையெழிலன் |
| நிறைமதியன் | நீலன் | நீலமணி | நீலவண்ணன் | நெடுமாறன் |
| நெடுங்கிள்ளி | நெடுமானஞ்சி | நெடுவெண்ணிலா | நெடுஞ்செழியன் | நெடியோன் |
| நெஞ்சுக்கினியன் | நெடுந்துறைக்கோ | பகவன் | பகலவன் | பகுத்தறிவன் |
| பண்ணன் | பண்பரசன் | பரிதி | பரிதிமாற்கலைஞன் | பரிமேலழகன் |
| பவழன் | பழமலை | பன்னீர்செல்வன் | பனம்பாரன் | பனிமலை |
| பால்வண்ணன் | பாரி | பார்வேந்தன் | பாவேந்தர் | பாலரசன் |
| பாநம்பி | பாவண்ணன் | பாவாணன் | பாண்டியன் | பாசறைக்கோ |
| பாப்பித்தன் | பாமகன் | பாவிசைக்கோ | பிசிராந்தை | புகழ்மாறன் |
| புகழொளி | புகழேந்தி | புதுமைப்பித்தன் | புரட்சிப்பாவலன் | புரட்சிவேந்தன் |
| புரட்சிக்கலைஞன் | புரட்சிமொழி | புரட்சித்தலைவன் | புலமைப்பித்தன் | புலித்தேவன் |
| புலியரசன் | புலிக்கோ | புகழ்வாணன் | பூங்குன்றன் | பூமகன்பூவரசன் |
| பூவேந்தன் | பூஞ்சோலை | பெரியநாயகம் | பெருஞ்சித்திரன் | பெருஞ்சேரல் |
| பெருவழுதி | பெருஞ்சோழன் | பெருவளத்தான் | பேகன் | பேரின்பன் |
| பேரறிவாளன் | பேரன்பன் | பொதிகைச்செல்வன் | பொதுமைநெஞ்சன் | பொய்யாமொழி |
| பொழிலன் | பொறையன் | பொன்மலையன் | பொன்னன் | பொன்னன்பன் |
| பொன்னருவி | பொன்மலையமான் | பொதியவெற்பன் | பொதுமைஉளத்தான் | பொய்கையான் |
| பொன்னரசன் | பொன்னழகன் | பொன்னையன் | பொற்கோ | போற்றியன் |
| மகிழ்ச்சி | மகிழ்கோ | மகிழ்நன் | மணவழகன் | மணவாளன் |
| மணிமாறன் | மணிமார்பன் | மணிவண்ணன் | மணிமொழியன் | மணிவேல் |
| மணிவாசகன் | மதிசூடி | மதியழகன் | மதியொளி | மதிவாணன் |
| மயிலக்காளை | மருதன் | மருதப்பன் | மருதவாணன் | மலரழகன் |
| மன்னர்மன்னன் | மலையமான் | மன்றவாணன் | மறவன் | மறைமலை |
| மள்ளன் | மாசிலாமணி | மாசிலாநம்பி | மாடலன் | மாசிலன் |
| மாலிறைவன் | மாதவன் | மாரி | மாரிமுத்து | மாவளத்தன் |
| மாவளவன் | மாறன்வழுதி | மாறன்மொழி | மாணிக்கம் | மாமல்லன் |
| மாமன்னன் | மாவீரன் | மாலவன் | மின்னவன் | முகிலன் |
| முடியரசன் | முத்தப்பன் | முத்தையன் | முத்தமிழன் | முத்தழகன் |
| முத்துக்குமரன் | முத்தறிவன் | முத்துக்கோ | முதுகுன்றன் | முருகன் |
| முல்லைவாணன் | முல்லைநாடன் | முருகுபாண்டியன் | முருகுவண்ணன் | முருகப்பன் |
| மும்மொழிச்சோழன் | மூதறிஞன் | மூலவன் | மூவேந்தன் | மூதுரையாளன் |
| மெய்யப்பன் | மெய்யறிவன் | மோசிகீரன் | வஞ்சிக்கோ | வஞ்சிவேந்தன் |
| வடிவழகன் | வடிவேலன் | வண்ணமுத்து | வணங்காமுடி | வல்லவன் |
| வல்லத்தரசு | வல்வில்ஓரி | வலம்புரிநாயகன் | வள்ளவன் | வள்ளுவநெறியன் |
| வளங்கோ | வளவன் | வாழ்வரசன் | வாழ்வரசு | வாலறிவன் |
| வானமுகிலன் | வானம்பாடி | வானவரம்பன் | வானமலை | விடுதலைவேட்டன் |
| வில்லவன் | வில்லழகன் | வில்லவன்கோன் | வீரப்பாண்டியன் | வெய்யோன் |
| வெள்ளிமலை | வெற்றிகொண்டான் | வெற்றிவேந்தன் | வெற்றியழகன் | வெற்றிமொழி |
| வெற்றிவாணன் | வேங்கடவன் | வேங்கையன் | வேங்கைமார்பன் | வேங்கைவேந்தன் |
| வேம்பையன் | வேள்பாரி | வையவன் | வையநம்பி | வைரவன் |

வைரமுத்து வைரம் வைரமொழி வைரவேலன் வைரநெஞ்சன்

## தேனினும் இனிய நற்றமிழில் பெயர்சூட்டி தமிழை சுவைப்போம்
## பெண் குழந்தை பெயர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| அகல்விழி | அகவழகி | அங்கயற்கண்ணி | அஞ்சொலி | அழகிற்கினியாள் |
| அமுது | அமுதரசி | அமிழ்தம் | அமிழ்தவல்லி | அரங்கநாயகிஅரசி |
| அருண்மொழி | அருளரசி | அருளழகி | அருட்குவை | அருவிமொழி |
| அருள்மொழி | அல்லி | அலர்மேலு | அவ்வை | அறச்செல்வி |
| அறிவுமதி | அறிவுமணி | அறிவுக்கனி | அறிவழகி | அன்புமதி |
| அன்பரசி | அன்புச்செல்வி | அன்னம் | அறிவரசி | அறிவொளி |
| அணிநிலா | அருள்வடிவு | அருட்செல்வி | அருந்தமிழ் | அன்னக்கிளி |
| ஆடற்செல்வி | ஆண்டாள் | ஆதிரை | ஆயிழை | ஆராயி |
| ஆராவமுதம் | ஆற்றலரசி | ஆதித்தமிழ் | ஆதிமொழி | ஆழிநங்கை |
| இசையரசி | இசைச்செல்வி | இசைமகள் | இசைமொழி | இயலரசி |
| இளவரசி | இளநங்கை | இளவெயினி | இளங்குயில் | இன்பவல்லி |
| இன்னிசை | இன்மொழி | இளங்கொடி | இளமதி | இளவெழிலி |
| இனியவள் | இன்னிலா | இன்முல்லை | இளவழகி | இளங்கிளி |
| இன்தமிழ் | இயலிசை | இயலிசையாள் | இலக்கியா | இளநிலா |
| இன்நிலா | இளந்தென்றல் | இனியள் | இனியவள் | ஈழச்செல்வி |
| ஈழமுல்லை | ஈழமகள் | ஈழமதி | உலகமுதல்வி | உவகை |
| உயிர்நாயகி | உலகநாயகி | எண்குணச்செல்வி | எயினி | எல்லம்மா |
| எல்லம்மை | எழில் | எழில்நிலவு | எழிலம்மை | எழிலரசி |
| எழில்விழி | எழிற்செல்வி | எழிலன்பி | எழுஞாயிறு | ஏந்திழை |
| ஏந்திசை | ஏழிசை | ஏழிசைமொழி | ஏழிசைப்பாவை | ஏழிசைமுதல்வி |
| ஒண்ணிலா | ஒப்பிலாமொழி | ஒளியவள் | ஒளிர்மதி | ஒளிச்செல்வி |
| ஒளிப்பாவை | ஓவியா | ஓவியச்செல்வி | ஔவை | கடற்கண்ணி |
| கண்ணம்மா | கண்ணகி | கண்மணி | கண்ணுக்கினியாள் | கதிர்மணி |
| கதிர்மதி | கதிர்செல்வி | கதிரொளி | கயற்கண்ணி | கயல்விழி |
| கருங்குழல் | கருத்தம்மா | கலையரசி | கலைமதி | கலையழகி |
| கலைமொழி | கலைச்செல்வி | கலைமகள் | கலைநிலவு | கவினி |
| கல்விச்செல்வி | கவின்மொழி | கவின்நிலவு | கன்னல்மொழி | கன்னல் |
| கனிமொழி | கன்னிமொழி | கவின்அரசி | கனலி | கனல் |
| கலைவல்லி | கலைமான் | காக்கைபாடினி | காந்தமொழி | காந்திமதி |
| காவிரி | கார்குழலி | கார்முல்லை | காரிகை | காந்தள் |
| காரெழிலி | குடியரசி | குடியரசு | குணவழகி | குணமாலை |
| குணமலை | குணமல்லிகை | குணமல்லி | குணமதி | குமரி |
| குமரிச்செல்வி | குமரிமதி | குமுதினி | குயிலி | குயில்மொழி |
| குழலி | குறள்மொழி | குறளமுது | குறள்செல்வி | குறள்நெறி |
| குறளன்பி | குறிஞ்சிநங்கை | குறிஞ்சி | குறிஞ்சியழகி | கூர்விழி |
| கூடல்நாயகி | கூர்வேலழகி | கொல்லிப்பாவை | கொற்றவை | கொன்றைமலர் |
| கொன்றைசூடி | கொண்டல்மகள் | கோமதி | கோமகள் | கோதை |
| கோவரசி | கோவழகி | கோப்பெருந்தேவி | கோதைநாயகி | கோவைமொழி |
| சண்பகம் | சந்தனச்சிந்து | சிட்டுமொழி | சிந்தைமொழி | சிரிப்பழகி |
| சிந்து | சிந்துமொழி | சித்திரச்செல்வி | சித்திரச்செந்தாழை | சித்திரப்பாவை |
| சிவமாலை | சிவமொழி | சிவந்தி | சிவகாமி | சிலம்பரசி |
| சிலம்பொலி | சுடர்மணி | சுடர்க்கொடி | செங்கண்ணி | செங்கயற்கண்ணி |
| செங்காந்தள் | செங்கதிர் | செங்கொடி | செந்தமிழ் | செந்தமிழ்ச்செல்வி |
| செந்தமிழரசி | செந்தாமரை | செந்தளிர் | செங்கதிரொளி | செந்தாழை |
| செம்பியன்மாதேவி | செம்மலர் | செம்மதி | செம்பை | செம்மொழி |
| செல்லம் | செல்வி | செல்வக்கொடி | செல்வநாயகி | செவ்வந்தி |
| செவ்வந்திமணி | செவ்வல்லி | செவ்விழி | செந்நிலா | செம்மணி |
| சேரமாதேவி | சேயிழை | சொல்லரசி | சொல்லமுது | சோலை |
| சோலையரசி | சோழன்மாதேவி | ஞாயிறு | தங்கம் | தண்ணிலா |
| தண்மதி | தண்ணிலா | தமிழிசை | தமிழ்எழிலி | தமிழ்மணம் |
| தமிழ்ச்செல்வி | தமிழ்க்குறள் | தமிழ்ச்சோலை | தமிழ்மலர் | தமிழினி |
| தமிழ்த்தென்றல் | தமிழருவி | தமிழின்பம் | தமிழ்முல்லை | தமிழ்ப்பாவை |

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழணங்கு | தமிழ்ப்பொழில் | தமிழ்ச்சிட்டு | தமிழ்மங்கை | தமிழ்மதி |
| தமிழரசி | தமிழ் இலக்கியா | தமிழமுது | தவமணி | தாமரை |
| தாயம்மாள் | தாமரைச்செல்வி | தாமரைக்கண்ணி | தாழ்குழலி | திருமகள் |
| திங்கட்செல்வி | திருமலர் | திருவரசி | திருவொளி | திருமொழி |
| திருவாய்மொழி | தில்லையரசி | தில்லைநாயகி | தில்லைச்செல்வம் | திருமங்கை |
| திருப்பாவை | திருமாமணி | திருவளர்செல்வி | திருவாய்மொழி | தீங்குழலி |
| தீங்குயில் | தும்பை | துளசி | துளசியம்மாள் | துடியிடை |
| தூயவள் | தெய்வச்சிலை | தென்குமரி | தென்றமிழ்ப்பாவை | தென்றல் |
| தென்றல்மொழி | தென்னவன்மாதேவி | தென்றல்மகள் | தென்மொழி | தென்றமிழ் |
| தென்னரசி | தென்னவள் | தேம்பாவணி | தேவி | தேவிமொழி |
| தேவிசுடர் | தேன்குழலி | தேனருவி | தேன்சிந்து | தேன்நிலா |
| தேன்மொழி | தேன்மலர் | தேனரசி | தேனம்மா | தைமகள் |
| தைப்பாவை | தையல்நாயகி | நகைமுகை | நப்பசலை | நல்லெழில் |
| நன்மதி | நற்றமிழ் | நாகவல்லி | நகையாள் | நாவுக்கரசி |
| நிலாமணி | நிலவரசி | நிலவழகி | நிறைமதி | நிறைமொழி |
| நீலக்குழலி | நீலமலர் | நீலமேனி | நீலமணி | பகுத்தறிவு |
| பசுங்கிளி | பட்டு | பட்டம்மாள் | பனிமொழி | பனிமலர் |
| பனிமொழி | பரணி | பழகுதமிழ் | பரிமேலழகி | பவழமொழி |
| பவழக்கொடி | பன்னீர்மொழி | பாண்டிமாதேவி | பாமகள் | பாவரசி |
| பாவொளி | பாவை | பிரியநங்கை | பிறைநிலா | பிறைமதி |
| புகழ்மலர் | புதுமலர் | புதுமொழி | புதுப்பாவை | புரட்சிமொழி |
| புரட்சித்தலைவி | புங்கதிர் | புங்கொடி | புங்காடு | புங்குழலி |
| பூவரசி | பூங்கோதை | பூம்பாவை | பூவிழி | பூந்தமிழ் |
| பூந்தளிர் | பூமகள் | பூஞ்சோலை | பேரரசி | பேரழகி |
| பைந்தமிழ் | பைங்கொடி | பைங்கிளி | பைந்தொடி | பைம்மணி |
| பொற்கொடி | பொற்பாவை | பொற்றொடி | பொழில்நிலா | பொற்றாமரை |
| பொன்மதி | பொன்மொழி | பொன்னி | பொன்னவை | பொன்னடி |
| பொன்னரசி | பொன்னழகி | பொன்மணி | பொன்நிலா | மங்கை |
| மங்கலம் | மங்கலநாயகி | மஞ்சு | மடந்தை | மட்டுவார்குழலி |
| மணவழகி | மணிமொழி | மணிமேகலை | மணிவடிவு | மதியழகி |
| மதிமொழி | மதியொளி | மதியரசி | மணிச்சுடர் | மணிமுடி |
| மதிமகள் | மலர்நங்கை | மல்லிகை | மலர்கொடி | மலரொளி |
| மலர்மதி | மலர்விழி | மலர்மாலை | மலையழகி | மலைமகள் |
| மலையரசி | மழைச்செல்வி | மன்றலரசி | மாவடுவிழி | மாவிழி |
| மாதவி | மான்விழி | மாலைமதி | மாதரசி | மாதேவி |
| மாநிலா | மாமலர் | மாந்தளிர் | மாரியம்மை | மாணிக்கமொழி |
| மின்னல் | மின்னொளி | மின்விழி | மின்னியல் | மின்னழகு |
| மின்னழகி | மின்னல்கொடி | மீன்விழி | முழுமதி | முத்தமிழ் |
| முக்கனி | முகில் | முகில்வண்ணம் | முத்தமிழ்மொழி | முத்துநகை |
| முத்தழகி | முத்தம்மை | முரசொலி | முல்லை | முல்லைக்கொடி |
| முத்துமொழி | முத்தமிழ்அரசி | மெய்நங்கை | மொழியரசி | யாழிசை |
| யாழ்மொழி | யாழினி | யாழ்நங்கை | வடிவு | வடிவழகி |
| வஞ்சிமகள் | வஞ்சியரசி | வஞ்சிப்பாமகள் | வண்டார்குழலி | வள்ளி |
| வள்ளிநாயகி | வள்ளிக்கொடி | வளர்பிறை | வளர்மதி | வளர்சிந்து |
| வளர்மொழி | வளர்அறிவு | வலம்புரிமுத்து | வல்லவன்கோதை | வாகைசூடி |
| வாழ்வரசி | வார்குழலி | வான்மதி | வானருவி | வான்குயில் |
| வானம்பாடி | வானமாதேவி | வான்மதியழகி | வானிலா | விடிவெள்ளி |
| விண்ணிலா | விண்ணவள் | வீரம்மாள் | வீரமகள் | வீரம்மாதேவி |
| வீராயி | வீரப்பெண் | வெண்ணிலா | வெண்டாமரை | வெண்மணி |
| வெற்றிச்செல்வி | வெற்றியரசி | வெற்றியழகி | வெற்றிவேங்கை | வேங்குழலி |
| வேல்விழி | வேலாயி | வேலுநாச்சி | வைகறை | வையை |
| வைரம் | வைரமணி | வைரமொழி | வைரநெஞ்சம் | வைரமகள் |
| வைரமணி | | | | |

**தொல்காப்பியம் காட்டும் திருமணம்**

தொல்காப்பியம் எட்டு வகையான திருமணங்களைக் கூறுகிறது. இவற்றுள் சிறப்புடையது காந்தர்வம் ஆகும். காந்தர்வம் என்பது அன்பின் ஐந்திணை போன்றதாகும். இதுவே தமிழ் அகப்பொருள் மரபில் சிறந்ததாகக் கருதப்படுகிறது. ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் பால்வரைத் தெய்வம் (ஊழ் என்னும் வினை) காரணமாக ஒன்றுபட்டு அன்பு கொள்வர். அவர்கள் திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்வில் ஈடுபடுவர். இது கற்பு எனப்படும்.

கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபில் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுமே (தொல்-கற்பியல் நூ-1)

எனத் தொல்காப்பியம் கூறுகிறது. திருமணத்தின் போது சடங்குகள் செய்யப் பெற்றன. தலைமகளின் பெற்றோர் கொடுப்பத் தலைமகனின் பெற்றோர் ஏற்றுக்கொண்டனர். இன்றைய திருமணச் சடங்குகளிலும் மணமகள் பெற்றோர், திருமணம் செய்து தருகிறோம் என்றும் மணமகன் பெற்றோர், திருமணம் செய்து கொள்கிறோம் என்றும் கூறும் வழக்கம் உள்ளது.

**தொல்காப்பியம் கூறும் பொருத்தங்கள்**

தொல்காப்பியம் மணப்பொருத்தமாகப் பத்துப் பொருத்தங்களைக் கூறுகிறது. 1.பிறப்பு, 2.குடும்பம், 3. ஆளுமை, 4. வயது, 5. வடிவம், 6. நிலையான அன்பின் வழிபட்ட காமம், 7. நிறை, 8. அருள், 9. உணர்வு, 10. செல்வம் ஆகிய பத்து ஒப்புமைகளை மணமக்களுக்குத் தொல்காப்பியர் குறித்துள்ளார் இதனையே அக்காலமக்கள் நடைமுறையில் பின்பற்றி நடந்தனர். தொல்காப்பியர் கூறிய இப்பொருத்தங்கள் தமிழ் இனமக்களை நன்றாக வாழச் செய்தன. ஆனால் பஞ்சாங்கப் புரட்டர்கள் புதுப் பொருத்தங்களைப் புகுத்தினர். அவை 1. தினப்பொருத்தம், 2. கணப்பொருத்தம், 3.மகேந்திரப் பொருத்தம், 4. ஸ்திரி தீர்க்கப் பொருத்தம், 5. யோனிப் பொருத்தம், 6.ராசிப்பொருத்தம், 7. இராசி அதிபதிப் பொருத்தம், 8. வசியப்பொருத்தம், 9. ரச்சுப் பொருத்தம், 10. வேதைப் பொருத்தம் என்பன.

இப்பொருத்தங்கள் பொருந்தாமைகாரணம் காட்டித் தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கான ஆடவர் மகளிர் திருமணம் தடைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பல குடும்பத்தவர் மன, உடல் நலன்களை இழந்துள்ளனர். திட்டமிட்டுப் புகுத்தப்பட்ட இம்முறை தமிழினத்தைச் சிதைப்பதாகும்.

காந்தர்வம், கர்ப்பநிச்சிதம், குரு தெய்வ நியமனம் ஆகியவற்றிற்கு எந்தப் பொருத்தமும் பார்க்கத் தேவையில்லை என்று பஞ்சாங்கம் குறிப்பிடுகிறது. இது மிகவும் குறிக்கத்தக்க செய்தியாகும். சிவனடியார்கள் தமிழ் வழியில் வேள்வி செய்து திருமண நிகழ்வைச் செய்கின்றனர். தெய்வத் தன்மைநிலைநின்ற நம் குருமார்களால் அருளப்பெற்ற திருமுறைகள் திருமணத்தில் ஓதப் பெறுகின்றன. திருவருளும் குருவருளும் கூடிய நிலையில் செய்யப் பெறுகின்ற தமிழ்முறைத் திருமணத்தில் பஞ்சாங்கப் பொருத்தங்களை முன்னிருத்த வேண்டியதில்லை. தமிழ் வழித் திருமணம் மணமக்களின் வாழ்வில் அன்பையும், அறத்தையும், அருளையும், பொருளையும் வளர்க்கிறது. குடும்பத்தில் அமைதியும் தன்னம்பிக்கையும் உருவாக்குகிறது.

**அகநானூறு காட்டும் திருமணமுறை**

சங்கநூல்களில் ஒன்று அகநானூறு ஆகும். இது அக்காலத்து வாழ்ந்த ஆடவர் மகளிர் காதல், கற்பு வாழ்க்கை பற்றிக் கூறுகின்ற அகப்பொருள் நூலாகும். நானூறு பாடல்களின் தொகுப்பைக் கொண்டுள்ள இந்நூலில் இரண்டு பாடல்கள் தமிழர் திருமண மரபை விளக்கிக் கூறுகின்றன.

உழுந்தினால் செய்யப்பெற்ற பொங்கலோடு பல்வேறு வகையான உணவுகளையும் இடையறாது உறவினர்கள் கூடி உண்டனர். குளிர்ந்த பெரிய பந்தலின் கீழ் மணல் பரப்பினர். வீட்டில் விளக்குகளை ஏற்றி வைத்தனர். மாலைகளைத் தொங்கவிட்டனர்.

திங்களை உரோகணி கூடிய நன்னாளில் மிக்க இருள் நீங்கிய விடிகாலையில் குடம், மண்டை என்ற அகன்ற கலம் ஆகியவற்றை ஏந்திய மகளிர் திருமண நிகழ்வுக்குரிய

பொருள்களை முறையே தந்து கொண்டிருந்தனர்.

மகனைப் பெற்ற மகளிர் நால்வர் கூடிநின்று கற்பின் வழாது உன்னை அடைந்த கணவனை விரும்பிப் பேணுக என வாழ்த்தினர். நீர், பூ, நெல் இவற்றைக் கலந்து மணமக்கள் மேல் தூவினர்.

திருமணம் நடந்த நாளில் மணமக்கள் இருவரையும் ஓர் அறையில் உடன் கூட்டி வைத்தனர். மணமகளைப் பெரிய மனைக்கிழத்தி ஆவாய் என வாழ்த்தினர். (அகநானூறு பா.எ.86)

இப்பாடலின் மூலம் நாம் பல்வேறு செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது. வேதவேள்வி முதலிய சடங்குகள் இல்லை. ஆரியப் பிராமணர் வழிக் கிரியைகள் ஏதுமில்லை. ஆண் குழந்தை பெற்ற மகளிர் கூடிச் சடங்கு செய்தனர். அவர்கள் நெல்லும் நீரும் கலந்து தூவியது குறிக்கத்தக்க சிறப்புடையதாகும். நெல்லும் நீரும் சேரும் போது நெல் முளைத்தல் தன்மையைப் பெறுகிறது. மணமக்கள் தம் மரபு வாழ்வதற்காக மகப்பேற்றினை அடைய வேண்டும் என்ற உயரிய நோக்கம் இதனால் வெளிப்படுகிறது. முளைத்தல் தன்மைஇல்லாத அரிசி (மஞ்சளரிசி) இன்றைக்குப் பயன்படுத்தப்படுகிறது. இது ஏற்புடையதாகுமா?

மேலும் ஓர் அகநானூற்றுப் பாடல் மூலம் (பா.எ.136) பின்வரும் செய்திகளை அறியலாம்.

1. சுற்றத்தார்க்கு உணவு வழங்கப்பட்டது
2. பறவைச் சகுனம் நன்றாக அறியப்பட்டது.
3. திங்களை உரோகணி கூடிய குற்றமற்ற நாளில் திருமணம் செய்யப்பெற்றது.
4. வீடு அழகுபடுத்தப்பட்டது.
5. கடவுளை வழிபட்டனர்.
6. மண முழவு ஒலிக்கப்பட்டது.
7. மணமக்களுக்கு நீராட்டப் பெற்றது.
8. புத்தாடை, அணிகலன்கள் அணிவிக்கப்பெற்றது.
9. திருமண நாளிலேயே மணமக்கள் ஒன்று கூட்டப் பெற்றனர்.

(தமர் நமக்கீத்த தலைநாள் இரவில்)

இவ்விரண்டு பாடல்களிலும் பொதுவாக ஒத்துவரக் கூடிய பல கருத்துக்கள் இருப்பதைக் கற்போர் அறிய முடியும்.

**திருஞானசம்பந்தர் நிகழ்த்திய திருமணம்**

சைவ சமயத்தின் சிறந்த தலைவரான திருஞான சம்பந்தப் பெருமான் பெரும் புரட்சியாளர் ஆவார். வேதம் ஓதும் பிராமணர் குலத்தில் தோன்றியவராயினும் தமிழோடு தம்மைஇணைத்துக் கொண்டவர். அவர் தமது இளம் வயதில் தமக்குத் திருமணம் நிகழும் முன்னரே ஒரு திருமணத்தை நிகழ்த்தியவர். திருமணம் செய்விப்போர் திருமணம் ஆனவராக இருத்தல் வேண்டுமென்ற ஆரிய மரபை உடைத்தெறிந்தவர் திருஞானசம்பந்தர்.

வைப்பூர் என்னும் ஊரில் தாமன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவனுடைய மகள் தன் அத்தை மகனுடன் திருமணம் புரியும் நோக்கில் வீட்டைவிட்டு வெளியே வந்துவிட்டாள். திருமருகல் என்னும் தலத்தில் அவன் பாம்பு தீண்டி இறந்தான். அப்பெண் வருந்தி அழுதாள். அத்தலத்திற்கு வந்த திருஞானசம்பந்தர் அதனை அறிந்து இறையருளை வேண்டி அவனுக்குஉயிரூட்டினார். எழுந்த அவனுக்கு அப்பெண்ணை உடனே மணம் முடித்தார்.

நங்கைஅவள் தனைநயந்த நம்பியோடு
நானிலத்தில் இன்புற்று வாழும் வண்ணம்
மங்குல் தவழ் சோலைமலி புகலி வேந்தர்
மணம்புணரும் பெருவாழ்வு வகுத்து விட்டார்

(பெரியபுராணம் பா.எ.2386)

எனச் சேக்கிழார் இந்நிகழ்ச்சியை எடுத்துக் காட்டுகிறார்.

இங்கு இறந்தவனை எழுப்பிய திருஞானசம்பந்தர் அவனுக்குத் தீட்டுக்கழித்தார் என்றோ, சுத்தபுண்ணியாவாசம் செய்தார் என்றோ சேக்கிழார் கூறவில்லை. மேலும்

வேள்வி வளர்த்தார் என்றோ, திருமணச் சடங்கு செய்தார் என்றோ, பிறரைக் கொண்டு செய்வித்தார் என்றோ கூறவில்லை தான் அத்திருமணத்தை இறையருளால் சடங்கின்றி நடத்தினார் என்பது பெறப்படுகிறது. இதனால் திருமுறை ஓதி இத்திருமணம் நடந்தது என ஐயமின்றி அறியலாம்.

**சுந்தரர் செய்த திருமணம்**

சைவ மரபுகள்என்ற பெயரில் ஆரிய ஆதிக்கத்தால் சாதிச்சைவம் வளர்க்கப்பட்டது. சாதிச்சைவத்தை முதன் முதலில் தகர்த்தவர் திருஞானசம்பந்தர். அவருக்குப்பின் சுந்தரர் அதனைப் பின்பற்றினார். அதனால் புரட்சித் திருமணம் புரிந்தார் சுந்தரர்.

முப்போதும் திருமேனி தீண்டுவோர் எனக் கூறப்படுகின்ற ஆதிசைவக்குலத்தில் தோன்றிய சுந்தரர் எப்போதும் திருமேனி தீண்டி வழிபடும் அடியார்களைப் பெரிதும் போற்றுபவர். அதனாலேயே திருத்தொண்டத் தொகை பாடியருளினார். ஆதிசைவக்குலத்தில் (சிவாச்சாரியார்) தோன்றிய அவர் கணிகையர் (தேவரடியார்) குலத்தில் தோன்றிய பரவையாரை அற்புதமோ சிவனருளோ என அதிசயத்து மணந்து கொண்டார். இத்திருமணம் எட்டாம் நூற்றாண்டில் நிகழ்ந்த புரட்சி பூத்த திருமணமாகும். சுந்தரரைச் சாதியை விட்டு விலக்கி வைக்கும் அளவுக்கு அக்காலத்தில் எந்த அந்தணருக்கும் நெஞ்சுரம் இருந்ததாகத் தெரியவில்லை. இருந்திருந்தால் அவரைச் சாதியிலிருந்து விலக்கிவிட்டதாக அறிவித்திருப்பார்கள்.

சாதி கருதாது மணம் புரிந்து கொண்ட சுந்தரர் மேலும் ஒரு புரட்சி செய்தது குறிக்கத்தக்க ஒன்றாகும்.

யாமத்து இருளும் புலரக் கதிரோன்
எழுகாலையில் வந்து அடியார்கூடிச்
சேமத்துணையாம் அவர்பேர் அருளைத்
தொழுதே திருநாவலர் கோன்மகிழத்
தாமக் குழலாள் பரவை வதுவை
தகும்நீர் மையினால் நிகழச் செய்தார்

(பெரியபுராணம் பா.எ.326)

எனச் சுந்தரர் திருமணத்தைச் சேக்கிழார் எடுத்துக்காட்டுகிறார்.

யாமமாகிய இருள்கழிய ஞாயிறுதோன்றிய அதிகாலை நேரம். திருவாரூர்ச் சிவனடியார்கள் எல்லோரும் ஒன்று கூடினர். துணையாகத் திகழ்கின்ற சிவபெருமானின் பேரருளைத் தொழுது வாழ்த்தினர். சுந்தரர் மகிழுமாறு சுந்தரருக்கும் பரவையாருக்கும் திருமணத்தை நடத்தினர். சிவப்பிராமணராகிய சுந்தரருக்குக் கணிகையர் குலத்தைச் சேர்ந்த பரவையாரைச் சிவனடியார்கள் கூடித் திருமணம் செய்து கொடுத்துள்ளனர். அடியார்கள் திருமணம் செய்விப்பதற்கு உரியவர்கள் என்பதை இறைவனே அவர்கள் கனவில் சென்று அறிவித்துள்ளார்.

திருவாரூர் வாழ் பெருமான் அடிகள்
அன்றாங்கு அவர்மன் றலைநீர் செயும் என்று
அடியார் அறியும் படியால் அருளி

(பெரியபுராணம் பா.எ.324)

என்று சேக்கிழார் கூறுவதால் திருமணத்தைச் செய்து வைக்கின்ற உரிமைஉடையவர்கள் அடியார்களே என்பது தெள்ளத் தெளிவாக விளங்குகின்றது.

அவ்விருவரும் அடியாராதலாலும் பரவையார் உருத்திர கணிகையார் ஆதலாலும் உருத்திர கணத்தவர்களாகிய அடியவர்களே அவரது திருமணத்தை நிகழ்த்தும் உரிமைஉடையாராதலாலும் அடியார்க்கு அருளியது என்க. (பெரியபுராணம் பா.எ.324 உரை) சிவக்கவிமணி உரை இக்கருத்தை மேலும் வலுப்படுத்துகிறது. அடியார்கள் கூடி நடத்திய திருமணம் என்பதால் இத்திருமணம் தாய் மொழியாம் தமிழ்வழியிலேயே நடைபெற்றது என்பதை உணரலாம்.

(முனைவர் அ.மா.இலட்சுமிபதிராக அவர்களின் திருநெறிய தமிழில் திருமண நிகழ்வுகள் என்ற கட்டுரையிலிருந்து)

# பஞ்சபுராணம்

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலை முழுவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே.

- தேவாரம்

நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத் திருப்பரால் அன்னே என்னும்
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர் ஆனந்தரால் அன்னே என்னும்

- திருவாசகம்

மாலுலா மனம் தந்து என்கையில் சங்கம்
வவ்வினான் : மலைமகள் மதலை
மேலுலாம் தேவர் குலமுழுதாளும்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாம் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தன் என் சேந்தன்
என்னும் என் மெல்லியள் இவளே

- திருவிசைப்பா

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உளறி உமைமணவாளனுக்கு ஆட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே

- திருப்பல்லாண்டு

வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற்பென இடப்பாகம்
கொள்ளுமாமலை யாளுடன் கூட வீற்றிருந்த
வள்ளலாரை முன் கண்டனர் வாக்கின் மன்னவனார்

- பெரியபுராணம்



வீம வேடம் (திருச்சுழி திரௌபதியம்மன் கோவில்)

## தலைவன் தலைவியிடம் பேசும் காட்சி

- க. வெள்ளிமலை

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே (குறுந்தொகை - 40)

What could my mother to be yours?
What kin is my father to yours any way?
And how did you and I meet ever?
But in love our hearts have mingled
Like red earth and pouring rain!

பொருள் : என்பால் அன்பு அகலாத மங்கையே! என் தாயும் உன் தாயும் நாம் பழகுவதற்கு முன் எத்தகைய உறவினர்? அவ்வாறே, என் தந்தையும் உன் தந்தையும் எவ்வகையில் உறவு முறையினர்? போகட்டும், இப்பொழுது பிரியாமல் அன்பு பாராட்டும் நானும், நீயும் எவ்வண்ணம் அறிந்திருந்தோம்? ஆம்! நம் பெற்றோரும் முன்பின் அறியாதவர்; ஏன், நாம் இருவரும் இதற்கு முன் ஒருவரை ஒருவர் பார்த்துப் பழகியதுண்டா? இருந்தும், நம்மிடையே ஏற்பட்ட இவ்வுறவு, நம்மாலன்றி ஊழ்வினையின் வலிமையால்- தெய்வத்தின் அருளால் நாம் இன்று இணைந்திருக்கிறோம். இல்லையா? இப்பிணைப்பு எத்தகையது என்பதை நீ அறிதல் நலம்.

நீலவானில் கோலநிலா ஒளிக்கற்றைகளை அள்ளிவீசி மண்ணுலகின் காரிருளையும் ஓட்டுகிறது. அந்நிலவையும் மறைத்துக்கொண்டு கருமேகங்கள் அவ்வானில் உலா வருகின்றன ; மலைச்சிகரங்களையும் முத்தமிட்டுச் செல்கின்றன. இடையிடையே மாந்தரை அதிரவைக்கும் இடியும் மின்னலும் தோன்றி வேடிக்கை காட்டுகின்றன. அம் மேகங்கள் மழையைப் பொழிகின்றன. அப் பெயல்நீர் செம்மண் நிலத்தில் படிகிறது. ஆம்! கறுத்த மேகம் பெய்த மழைநீர் செம்மண்ணில் விழுந்ததும் அம்மண்ணின் செந்நிறத்தைப் பெறுகிறது. அதுமட்டுமா? அம் மண்ணின் தன்மையாகிய சுவையையும் பெற்று உருமாறி விடுகிறதல்லவா அம் மழைநீர்? கருமணிப் பாவையே! அப் பெயல்நீர் போலவே நம்முடைய இரு நெஞ்சமும் ஒன்றாகக் கலந்துவிட்டனவே! அவ்வாறிருக்க, உன்னை நான் எப்படிப் பிரியவோ, மறக்கவோ முடியும்? ஆமாம், உன்னைவிட்டு ஒரு நொடியும் பிரிந்து அகலேன் என்பதை உன் நெஞ்சில் அழுத்தமாகப் பதிந்துகொள்.

# இதை விடவா ஒரு வாழ்க்கை

நாதஸ்வரம் வாசிக்கவோ
புல்லாங்குழல் வாசிக்கவோ
பிரியப்படவில்லை -
நூல் வாசிக்கும் ஆசைமட்டும்
நாள்தோறும் வளர்கிறது.

கதை
கவிதை
கட்டுரை
எதுவாயிருப்பினும்
மகிழ்ச்சி -
சிறகுகட்டிக் கொள்ளும்
மகிழ்ச்சி!

சற்றுமுன் தின்ற பசும்புல்லை
ஆசுவாசமாய் அசைபோடும்
பசுவைப்போல்
படித்ததை நினைக்க நினைக்க
ஆனந்தம் பிறக்கிறது.

நூல் ஒரு விநோதம் -
படைத்தவன்
சொன்னதைச் சொல்லும்;
சொல்லாததையும் சொல்லும்.

வாசிப்பு
புறத்தில் மறப்பு
அகத்தில் விழிப்பு!

வாசிப்பு -
தனிமைத்தவம்
தாய்மடி
வானமழை
ஆழ்கடல்
ஊன்றுகோல்
ஞானதீபம்
தேவகானம்
தலைதொட்டு ஆசீர்வதிக்கும்
தும்பிக்கை!

வாசலுக்கு வெளியே விரியும்
நீலவானம் :
என்
விருப்பத்திற்குரிய வேப்பமரம் :
ஒருகையில் தேநீர்
இன்னொருகையில் புத்தகம் -
இதைவிடவா ஒரு வாழ்க்கை?!

- பொன்மணி வைரமுத்து



முதல் வகுப்பு குழந்தைகள் வாண்டுகள் அரங்கம் 2007-2008

## மனைவி உங்களை பாராட்ட வேண்டுமா


1. மனைவியைக் கவுரமாக நடத்துங்கள்.
2. இரவு எங்கே போகிறீர்கள், எப்போது திரும்புவீர்கள் என்பதைச் சொல்லிவிடுங்கள்
3. ஆடம்பரச் செலவுகளைக் குறையுங்கள்
4. அவளுக்கு சிறிது பாக்கெட் மணி கொடுங்கள்
5. உங்கள் பிரச்சனைகளை அவளிடம் விவாதியுங்கள்
6. அவள் பிரச்சனைகளை உங்கள் செவியில் போட்டால் மனதாரக் கேளுங்கள்
7. வருங்காலத்துக்குப் பணம் சேமித்து வைக்க நினையுங்கள்.
8. குழந்தைகளைப் பற்றிய சிந்தனை சதா உங்களுக்கு இருக்கட்டும்
9. அவள் பிரியும் நிலையிலும் வீட்டுக்குள் வரும்போதும் அவளை முத்தமிடுங்கள் அல்லது புன்னகையிலாவது பூத்தல் அவசியம்.

இவைகளை மறமாவல் கடைப்பிடித்து வந்தால் உங்கள் மனைவி உங்களை ஓஹோ என்று புகழ்வது நிச்சயம்

## கணவன் உங்கள் கைப்பிடியில் இருக்க வேண்டுமா?

1. வெளியில் சென்ற கணவர் லேட்டாக வீடு திரும்பினால் எரிந்து விழக்கூடாது.
2. கணவன் கோபமாகப் பேசும்போது வாயைத் திறக்கக் கூடாது.
3. தூங்கப் போகும் போதோ சாப்பிடும் போதோ எந்தக் குறைகளையும் கூறக்கூடாது.
4. புகுந்த வீட்டில் யாரைப் பற்றியும் குறை கூறக் கூடாது.
5. கணவர் கேட்பதற்கு மற்றும் அவர் கூறுபவைகளுக்கு அலட்சியமாக மதித்து நடந்து கொள்வதோ, பதில் கூறுவதோ கூடாது
6. அடிக்கடி அம்மா வீட்டுக்குப் போகக்கூடாது.
7. விடுமுறை நாட்களில் வெளியில் சுற்றாமல் ஓய்வு எடுக்கச் சொல்ல வேண்டும்.
8. வெளியில் செல்லும் போது கணக்காகப் பணம் கொடுத்தனுப்பக் கூடாது.
9. கணவர் வாங்கி வரும் பொருட்களை எப்படி இருந்தாலும் அருமைஎன்று கூற வேண்டும்.

இவ்வழிகளை கடைப்பிடித்தால் இனி உங்கள் கணவர் கைப்பிடியில்



அர்ச்சுனன் தபசு
திருச்சுழி



**ஆறு முறை பூமியை வலம் வருதலும்,
நூறு முறை சேது ஸ்நானம் செய்தலும்,
ஆயிரம் முறை காசியில் குளித்தலும்,
ஆகிய இவற்றால் கிடைக்கும் புண்ணியம்
தாயை பக்திப் பூர்வமாக ஒருமுறை
வணங்கினாலே கிடைக்கும்!**

## மனிதன் மனிதனாக சில விஷயங்கள்

| | | |
|---|---|---|
| வணங்கத்தக்கவர்கள் | - | தாயும், தந்தையும் |
| வந்தால் போகாதது | - | புகழ், பழி |
| போனால் வராதது | - | மானம், உயிர் |
| தானா வருவது | - | இளமை, முதுமை |
| நம்முடன் வருவது | - | பாவம், புண்ணியம் |
| அடக்க முடியாதது | - | ஆசை, தூக்கம் |
| தவிர்க்க முடியாதது | - | பசி, தாகம் |
| நம்மால் பிரிக்க முடியாதது | - | பந்தம், பாசம் |
| அழிவைத் தருவது | - | பொறாமை, கோபம் |
| எல்லோருக்கும் சமமானது | - | பிறப்பு, இறப்பு |
| கடைத்தேற வழி | - | உண்மையும், உழைப்பும் |
| ஒருவன் கெடுவது | - | பொய்சாட்சி, செய்நன்றி மறப்பது |
| வருவதும், போவதும் | - | இன்பம், துன்பம் |
| மிக மிக நல்ல நாள் | - | இன்று |
| மிகப்பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | - | சமயோஜித புத்தி |
| மிகக் கொடிய நோய் | - | பேராசை |
| மிகவும் சுலபமானது | - | குற்றம் காணல் |
| கீழ்த்தரமான விஷயம் | - | பொறாமை |
| நம்பக் கூடாதது | - | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | - | அதிக பேச்சு |
| செய்யக்கூடாதது | - | தவறுகள் |
| செய்ய வேண்டியது | - | உதவி |
| விலக்க வேண்டியது | - | விவாதம் |
| உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| நழுவ விடக் கூடாதது | - | வாய்ப்பு |




மதுரை சீடு-ன் முதலாண்டு மற்றும் 10ஆம் ஆண்டு விழா விருந்தினர் டாக்டர்.எவாஞ்சலின்

# MADURAI SEED

A programme to support and empower underprivileged children and young people.

**What is MADURAI SEED?**

MADURAI SEED was founded in 1999 as an NGO to help underprivileged children and young people from Karumbalai, a poor area of MADURAI, Tamil Nadu. It places special emphasis on a holistic approach to developing the children's and young people's education in a variety of ways. Via drop-in centers, it offers local children and young people help with their school work and also with the transition to their working lives. It does this through supported study groups and training, a library to help and develop their reading ability, sports activities, excursions, camps, and a range of creative activities such as dance, music, art classes etc. in this way, MADURAI SEED gives very underprivileged children and young people the opportunity to make progress educationally, personally and socially, and to work towards a vocational goal.

**What does MADURAI SEED Comprise?**

I. MADURAI SEED has four holistic educational centers :

Vandugal Arangam is for children in school years 1 to 4 (6-9 year olds)

Vergal Arangam is for years 5 to 8 (10 to 13 year olds, when some children may leave school)

Kanavugal Arangam for years 9 to 12 (14 to 17 year olds, when youngsters may take final government examination to enter further education)

Thedalgal Arangam is for youngsters who haven't completed their education or who are already studying at a college. At present this team has 30 members.

II. Library :

Senthamizh Library is a part of MADURAI SEED with book for children and young people ranging from fiction to philosophy and History both in Tamil and English. Aiming to promote good reading habits and literacy. It is open to all the children and young people during holidays.

**What else does MADURAI SEED offer?**

I. Children and youth federations :

MADURAI SEED Children federation, MADURAI SEED youth federation

This is an activity where they emphasis on personality development, career guidance, camping, improving leadership skills, time management, aware about child rights, constitutional rights. These kinds of activities are facilitated by MADURAI SEED.

II. Journals :

A children's journal – Pudhuyugam – as well as for youngsters – Pudiya velichangal – both offer these children and young people an opportunity to express their views creatively. Both are published by MADURAI SEED at regular intervals.

III. Cultural groups :

The Vanmugil cultural group is organised by and for the children and young people. Here they teaches, practices culture-specific performing arts. In this way, MADURAI SEED children and young people learn to appreciate their own cultural background and grow more confident and competent

IV. Savings banks :

MADURAI SEED organizes the Thenkoodu savings bank to help the children learn about the importance of saving and managing money. The money of children has been distributed in the end of the year with some interest. MADURAI SEED mutual benefit fund for the young people has been set up for college youth and other young people to meet their most pressing needs.

V. Other activities ;

MADURAI SEED provides computers, other facilities to encourage the growth of young minds. SEED also organise a science club, social science club and the sports club. SEED volunteers conduct field trips, tours, camps and other activities to broaden children and young people's horizons and to help them develop social Awareness and respect for themselves & others. SEED also meets educational expenses thus fees, uniforms, books, etc. more than 40 children who would otherwise not to be able study in school and pays fees for computer training, vocational and other non-school studies.

VI. Benefits :

MADURAI SEED offer daily evening tuition free of charge – taught by college vounteers and other working volunteers. They are open to all interest children and young people regardless of their religious or

social background. In the year 2008-2009, 310 children 30 young people contacted & utilized SEED. Currently, 22 students are attending college studies.One is studying P.G. course, five are attending professional courses and other 16 studying UG courses. the 250 + Children and 25 young people are all very happy indeed to attend MADURAI SEED. Not only have their marks and their exam success improved dramatically, but they also are now demonstrating their other talents: The children and young people are growing in self-confidence and self-belief. For the girls especially MADURAI SEED is very significant, when a girl educate from school at 18, she has a far greater chance of finding a career and being able to earn her own living, and of there fore breaking out of the closed circle of this under privileged life.

**Who initiated MADURAI SEED, and who forms its staff?**

MADURAI SEED was officially registered by A.S.Karthik Bharathi, K.Anbarasan and V.Mariyammal in Karumbalai in February 2007. Karthik Bharathi, who grew up in Karumbalai himself, had previously worked for a similar NGO and has extensive first-hand experience of the local needs and problems. He is supported by M.Mansur, a full-time coordinator. They in turn rely on a team of twenty college students who have volunteered to work with the various groups of children for two hours every evening and to conduct special activities during holidays.

At present, MADURAI SEED has one dedicated classroom, in addition to the library (used exclusively for quiet study). All other classes are regularly held on the roof-tops of neighbor's private dwellings, which show the great willingness in the neighborhood to support the whole project. The volunteers do not just teach but also provide role models with good study habit s- day in, day out, week in, week out – indication of the charisma, commitment and idealism of these people.

We, the SEED Children, young people volunteers parents are cordially invite you to visit our SEED holistic education centers. We sure that you will appreciate seeing the joy and personal pride that SEED helps in bring into these children, young people lives. And if doing so encourages you to become with such a project, then SEED will have lifted to its name. Support and encourage education for the disadvantaged.

Thank you for your support and kindness.

# கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்

- மீரா

நியூட்டன்
புவியீர்ப்பு சக்தியைக்
கண்டுபிடித்தான்.
நான்
என் உயிர் ஈர்ப்பு சக்தியைக்
கண்டு பிடித்தேன்.
என் கண்டு பிடிப்பே,
நீ வாழ்க.

***

இலக்கியத் துறையிலிருந்து
விமர்சனத் தோணி ஓட்டும்
என் சகோதரர் ஒருவர்...
காதல் என்பது
பொய்யா மெய்யா
என்று கேட்டார்.
ஓ... நல்ல வேளை!
சரியான நேரத்தில்
உன்னைச் சந்தித்தேன்.
இல்லாவிட்டால்
தவறான விடையைச்
சொல்லியிருப்பேன்.

***

உலகமொழிகள் அனைத்திலுமுள்ள
உயர்ந்த கவிதைகளைத்
தேடி எடுத்துப் படித்துள்ளேன்.
என்றாலும்
எனக்கு பிடித்த கவிதை
உன் பெயர்தான்!
வையப் புகழ் வாய்ந்த
ஓவியர்கள் வரைந்துள்ள
சிறந்த சித்திரங்களை
விரும்பி வாங்கிப் பார்த்துள்ளேன்;
என்றாலும்
எனக்குப் பிடித்த சித்திரம்
உன் முகம்தான்!

***

உன்னை வரவேற்கிறேன்.
என்னை மீண்டும்
இசைக்க வைக்க வந்துள்ளாய்;
உன்னை வரவேற்கிறேன்.
நான் மகரயாழ்;
உன் மணிக்கரம்
தீண்டினால் போதும்.
என்னால்
உனக்குப் பெருமைவரும்
உன்னால்
எனக்கு வாழ்வு வரும்.
உன்னை வரவேற்கிறேன்.

***

பாகவதர் சொல்கிறார்;
பகவான் ஒருவன்தான் புருஷன்;
மற்றவர்கள் பெண்கள்.
நான் சொல்கிறேன் :
நீ ஒருத்திதான் பெண்;
மற்றவர்கள்...
ஒரு தரமல்ல
மூன்று தரம் சொல்கிறேன் :
என் மாதவிக் கொடியே!
நீ ஒருத்திதான்
பெண்! பெண்! பெண்!

***

இந்த உலகம்...
இதுவரை முட்காடாக வலித்தது;
இப்போது
முல்லைக்காடாக மணக்கிறது.
இதுவரை
எரிமலையாகத் தகித்தது;
இப்போது
பனிமலையாகக் குளிர்கிறது.
இதுவரை
கானல் நீராகக் கசந்தது;
இப்போது
காவிரி நீராக இனிக்கிறது.
என் எண்ணங்களில் பாடும்
கன்னங் கரிய குயிலே,
எல்லாம் உன் ரசவாதம்தான்!

என் மூதாதை ஒருவன்
பராசக்தியிடம் வரம் கேட்டான்
காணி நிலம்
மாட மாளிகை
தென்னந் தோப்பு
அது இது என்று வேண்டி
இறுதியில்
ஒரு பத்தினிப் பெண்ணைக் கேட்டான்.
நான் கேட்டால்
உன்னை மட்டும்தான் கேட்பேன்.
உன்னைப் பெற்றால்
உலகத்தில் உள்ள
எல்லாம் பெற்ற மாதிரி தானே!

***

ஒரு காலத்தில்
தன் காதலிக்காத்
தலையைக் கொடுத்தான்
ஒரு கவிஞன்
என்று படித்தபோது
இது என்ன மூடத்தனம்
என்று எண்ணிப்
பரிகசித்தேன்.
இப்போது -
எனக்கு
ஒரே ஒரு தலை தானே இருக்கிறது.
என்று நினைத்துப்
பரிதவிக்கிறேன்.

***

பொய்யல்ல...
இதற்குமுன்
எந்தப் பெண்ணையும்
ஏறெடுத்துப் பார்த்ததில்லை
உன்னைப் பார்த்த பிறகு
எதிரில் வரும்
எந்தப் பெண்ணையும் விடுவதில்லை.
என் பார்வையில்
இருட்டில் கட்டிப்பிடிக்கும்
இச்சை எதுவும் இல்லை.
என் காதலிக்கு இணையாக
இன்னொருத்தி இருக்கிறாளா என்று
வெளிச்சத்தில் கண்டுபிடிக்கும்
ஒரே ஒரு இலட்சியம் உண்டு.
இன்றுவரை... இன்றுவரை...
எனக்குத் தோல்வியே!

என்னுடைய நண்பர்களே
என்னைக்
கர்வம் பிடித்தவன் என்கிறார்கள்.
என் அறையில்
முத்துக்களையும் மணிகளையும்
குவித்து வைத்திருக்கவில்லை.
என் தலையில்
நிலா ஒளிவீசும்
மகுடம் தாங்கிக்
கங்கை கொண்ட
இராசேந்திரன் போல்
உலா வரவில்லை.
என் உடலில்
பட்டணிந்து பகட்டவில்லை.
பிறகு ஏன்
இப்படிப் பேசுகிறார்கள்.
ஓ.. காரணத்தைக்
கண்டு கொண்டேன்...
நீ என்னை நேசிக்கிறாய்...
அதனால்தான்
அவர்கள் இப்படிப் பேசுகிறார்கள்.

***

நான் துறவியாகப் போகிறேன்.
பற்றுகள் அனைத்தையும்
முற்றும் நீக்கிப்
பரம்பொருளிடம் மட்டும்
பற்று வைக்கும் துறவிகளை
நீ கேள்விப்பட்டிருப்பாய்.
நான்
சகல பற்றுகளையும்
வீசியெறிந்து விட்டு
உன் மீது மட்டும்
பற்று வைக்கும்
துறவியாகப் போகிறேன்.

***

ஒருவரை ஒருவர்
புரிந்துகொள்வதற்கு
திருமணத்தை தவிர
வேறொன்றும்
இல்லை.

- நபி மொழி

# ஸ்ரீ அரவிந்தர் அன்னை

- C.அருண்குமார்

கல்கத்தாவில் பிறந்து, லண்டனில் கல்விபெற்று, தாய்நாடு திரும்பி, சுதந்திரப் போராட்டத் தலைவரானவர் ஸ்ரீ அரவிந்தர். அலிப்பூர் குண்டு வீச்சுக் கேசில் ஓராண்டு சிறையில் அடைக்கப்பட்டு விடுதலையான பின் பாண்டிச்சேரிக்குப் போ என்ற அந்தராத்மாவின் குரலை ஏற்று ஸ்ரீ அரவிந்தர் 1910-இல் புதுவை வந்து இங்கேயே தவமிருந்தார்.

உலகின் வறுமையும் வேதனையும் ஒழிய மனிதன் தேடும் மோட்சம் உதவாது என்றறிந்த ஸ்ரீ அரவிந்தர் அலிப்பூர் சிறையிலிருந்த பொழுது விவேகானந்தர் அவர் முன் தோன்றி ஸ்ரீ அரவிந்தர் தேடும் சக்தி எது எனக் காண்பித்தார். அதுவே சத்தியஜீவியம். ரிஷி தன் தபோவலிமையால் சத்தியஜீவிய சக்தியை அடைந்து, தம் சரணாகதியால் அச்சக்தியை உலகுக்குக் கொணர்ந்தால் உலகம் மரணத்திலிருந்து விடுபடும் என ஸ்ரீ அரவிந்தர் அறிந்தார். அது பூர்த்தியாக 12 யோகிகள் தேவை. அது இல்லை.

1950-இல் ஸ்ரீ அரவிந்தர் சமாதியானார். அவர் சூட்சுமஉலகில்தங்கி செய்த யோக பலத்தால் 1956-இல் சத்தியஜீவிய சக்தி உலகை வந்தடைந்தது. பாரிஸில் பிறந்த அன்னை தம் தியானத்தில் கண்ட கிருஷ்ணனைத் தேடி புதுவையில் ஸ்ரீ அரவிந்தரைக் கண்டு, அவருடன் இறுதிக் காலம்வரை இருந்து 1973-இல் சமாதியானார். ஸ்ரீ அரவிந்த ஆசிரமம் 1926-இல் அவரால் நிறுவப்பட்டது. 1968-இல் ஆரோவில் நகரத்தை உலக சமாதானத்திற்காக நிறுவினார்.

**அதிர்ஷ்டம்**

பிறர் வாழ்வில் அதிர்ஷ்டத்தை உற்பத்தி செய்யும் மனமுடைய எந்த பக்தர் வாழ்விலும் அதிர்ஷ்டம் தானே உற்பத்தியாகும்.



ஸ்ரீ திரௌபதியம்மன்
பூப்பல்லாக்கு
திருச்சுழி.

# மதுரை

- A.S.கார்த்திக்பாரதி

சிவஸ்தலம் பெயர் திருஆலவாய் (மதுரை)
இறைவன் பெயர் சுந்தரேஸ்வரர், சொக்கநாதர், சோமசுந்தரர்
இறைவி பெயர் மீனாட்சி, அங்கயற்கண்ணி

பதிகம் திருநாவுக்கரசர் - 2
திருஞானசம்பந்தர் - 9

தமிழ்நாட்டில் உள்ள பல சிறந்த கோவில்களில் ஒன்றாகவும், பெரிய திருக்கோவில்களில் முதன்மைச் சிறப்பு உடையதாகவும் அமைந்து விளங்குவது பாடல் பெற்ற சிவஸ்தலமான மதுரை மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஆலயமாகும். சிவபெருமானின் அணிகலன்களில் ஒன்றாக பாம்பு வட்டமாக தன் வாலை வாயினால் கவ்விக்கொண்டு இத்தலத்தின் எல்லையைக் காட்டிதால் ஆலவாய் என்ற பெயர் இத்தலத்திற்கு ஏற்பட்டது. மதுரையை அழிக்க வருணனை ஏவிய ஏழு மேகங்களையும் தடுக்கும் பொருட்டு சிவபெருமான் தன் சடையிலிருந்து விடுத்த நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாகக் கூடி மதுரையைக் காத்ததால் நான்மாடக்கூடல் என்ற பெயரும் மதுரைக்கு உண்டு.

64 சக்தி பீடங்களில் ஒன்றாக விளங்குவது மதுரை மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் கோவிலாகும். இத்தலத்தில் மீனாக்ஷி அம்மன் சந்நிதியே முதன்மைபெற்றது. ஆகையால் இத்தலத்தில் முதலில் மீனாட்சியை வணங்கி விட்டே பிறகு சுந்தரேஸ்வரர் சந்நிதி சென்று அவரை வழிபடுவது மரபாக இருந்து வருகிறது.

கோவில் அமைப்பு : எட்டு கோபுரங்களையும் இரண்டு விமானங்களையும் உடைய இத்திருக்கோவில் கிழக்கு மேற்காக 847 அடியும், தெற்கு வடக்காக 792 அடியும் உள்ள ஒரு பெரிய கோவிலாகும். இக்கோவிலின் ஆடி வீதியில் நான்கு புறமும் ஒன்பது நிலைகளை உடைய நான்கு கோபுரங்கள் வானளாவி காட்சி தருகின்றன. இவற்றுள் 160 அடி உயரமுள்ள தெற்கு கோபுரம் மற்ற கோபுரங்களை விட உயரமானது. கிழக்கு கோபுரத்தின் உயரம் 153 அடி. வடக்கு கோபுரத்தைத் தவிர மற்ற மூன்று கோபுரங்களிலும் பல அற்புதமான சுதை சிற்பங்களைக் காணலாம்.

மீனாக்ஷி அம்மன் சந்நிதியின் முன்பகுதியாக அஷ்டசக்தி மண்டபம் அமைந்துள்ளது. வாயிலில் விநாயகர், முருகன் உருவங்களுக்கு இடையே மீனாக்ஷி கல்யாணம் சுதை வடிவில் காட்சி அளிக்கிறது. உள்ளே மண்டபத்தில் அமைந்துள்ள தூண்களில் எட்டுசக்தியின் வடிவங்கள் அழகுற அமைந்துள்ளன. அடுத்து உள்ள மீனாக்ஷி நாயக்கண் மண்டபத்தைத் தாண்டி உள்ளே சென்றால் இத்தலத்தின் இறைவி மீனாக்ஷி அம்மையின் சந்நிதி இருக்கிறது. கருவறையில் அம்மைஇரண்டு திருக்கரங்களுடன் ஒரு கையில் கிளியை ஏந்தி அருட்காட்சி தருகிறாள். இங்குள்ள மீனாட்சி அம்மன் விக்கிரகம் மரகதக் கல்லால் ஆனது. அம்மனுக்கு மரகதவல்லி என்றே ஒரு பெயர். மேலும் தடாதகை, கோமளவல்லி, பாண்டியராஜகுமாரி, மாணிக்கவல்லி, சுந்தரவல்லி என்றெல்லாம் அழைக்கப்படுவது இந்த அன்னை மீனாட்சியே. மீன் போன்ற கண்கள் உடையவள் என்பதால் மீனாட்சி. மீன் முட்டையிட்டு தனது பார்வையாலேயே அடை காத்து குஞ்சை பொரிக்க வைத்துவிடுமாம். அது போல அன்னை மீனாட்சி தன் அருள் கண்களாலேயே பக்தர்களை காக்கிறாள்.

சுவாமி சந்நிதியில் கருவறையில் இறைவன் சுந்தரேஸ்வரர் சிவலிங்கத் திருமேனியாக அருட்காட்சி தருகிறார். இது கடம்ப மரத்தடியில் தோன்றிய ஒரு சுயம்பு லிங்கமாகும். குலசேகர பாண்டியன் காலத்தில் முதன் முதலில் கடம்பவனக்காட்டில் சுயம்பு லிங்கத்தை கண்டறிந்து முதலில் இந்த கோவிலையும், பின் நகரத்தையும் அந்த மன்னன் நிர்மாணித்ததாக வரலாறு. இந்த சிவலிங்கம் பிற தலங்களாகிய மேருமலை, வெள்ளிமலை, திருக்கேதாரம், வாரணாசி மற்றும் பல பெருமைபெற்ற

தலங்கள் எல்லாவற்றிலும் உள்ள சிவலிங்கங்கள் எல்லாவற்றிற்கும் முன்னே தோன்றியதாகும். எனவே இதற்கு மூலலிங்கம் என்ற பெயரும் உண்டு. இதனை திருநாவுக்கரசர் தனது திருத்தாண்டக தேவாரப் பாடலில் குறிப்பிடுகிறார்.

முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி
முதிருஞ் சடைமுடிமேல் முகிழ்வெண் டிங்கள்
வளைத்தானை வல்லசுரா புரங்கள் மூன்றும்
வரைசிலையா வாசுகிமா நாணாக் கோத்துத்
துளைத்தானைச் சுடுசரத்தாற் றுவள நீறாத்
தூமுத்த வெண்முறுவல் உமையோ டாடித்
திளைத்தானைத் தென்கூடற் றிருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

நவக்கிரகங்களில் புதனுக்குரியதாக கூறப்படுகிறார் சுந்தரேஸ்வரர். சொக்கநாதர் என்று அறியப்படும் இத்தல இறைவன். புதனுக்கான பரிகாரங்களை இக்கோவிலில் உள்ள சிவனுக்கு செய்வது வழக்கம்.

விருத்தாசுரன் என்ற அசுரனை வென்ற தேவேந்திரன், தனது பிரம்மகத்தி தோஷம் நீங்க கடம்பவனத்தில இருந்த இந்த சிவலிங்கத்தை பூசித்து தனது தோஷத்தை போக்கிக் கொண்டதாக வரலாறு. அவன் பெயரிலேயே இங்குள்ள கருவறை விமானங்கள். இந்திர விமானம் என்று அழைக்கப்படுகிறது. 32 சிங்கங்களும், 64 சிவகணங்களும், 8 வெள்ளை யானைகளும் இந்த கருவறை விமானங்களைத் தாங்குகின்றன.

சித்ரா பௌர்ணமி : தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் சித்ராபௌர்ணமி விழா கொண்டாடப்பட்டாலும், மதுரையில் தான் சித்ரா பௌர்ணமி விழா விசேஷமாக கருதப்படுகிறது. ஒருமுறை விருத்தாசுரன், விஸ்வரூபன் என்ற இருவரை தேவேந்திரன் கொன்றான். அவர்கள் பிறப்பால் அந்தணர்கள் ஆனதால் இந்திரனை பிரம்மஹத்தி தோஷம் பிடித்துக் கொண்டது. அதிலிருந்து விடுபட தன் குருவை நாடி உபாயம் கேட்டான். குருபகவான் அவனிடம் பூலோகம் சென்று பல்வேறு சிவஸ்தலங்களில் வழிபட்டால் ஓரிடத்தில் உன் தோஷம் நீங்கும் என்று கூறினார். அதன்படி இந்திரன் காசி முதலிய பல ஸ்தலங்களில் வழிபட்டு தெற்குநோக்கி வந்தான். ஓரிடத்தில் கடம்ப மரத்தின் கீழ் சென்றவுடன் தன்னைப் பற்றியிருந்த தோஷம் விலகக் கண்டான். இந்திரன் மகிழ்ச்சியடைய அவன் முன் கடம்ப மரத்தடியில் சிவபெருமான் திருஆலவாய் சோமசுந்தரர் அவனுக்கு காட்சி கொடுத்தார். இந்திரன் சிவபெருமானுக்கு கோவில் கட்ட நினைத்து தேவலோகத்தில் இருந்து ஒரு விமானம் வரவழைத்தான். இத்தலத்து இறைவனுக்கு இந்திரன் விமானம் அமைத்ததால் அதற்கு இந்திர விமானம் என்றும், விண்ணில் இருந்து வந்ததால் விண்ணிழி விமானம் என்றும் சொல்லப்படுகிறது. ஆலயம் எடுத்த இந்திரனிடம் ஒவ்வொரு வருடமும் சித்ரா பௌர்ணமி நாளில் என்னை இங்கு வந்து வழிபடுக என்று கட்டளையிட்டார். அதன்படி ஒவ்வொரு வருடமும் சித்ரா பௌர்ணமி நாளில் இந்திரன் இங்கு வந்து வழிபடுகிறான் என்று திருவிளையாடல் புராணம் கூறுகிறது. அதனால் தான் சித்ராபௌர்ணமி மதுரையில் விசேஷமாகக் கருதப்படுகிறது.

ஈசனின் 64 திருவிளையாடல்களும் மதுரையிலேயே நடந்தவை. சுவாமி சந்நிதி பிரகாரங்களில் 64 திருவிளையாடல் காட்சிகள் சிற்பங்களாக இருக்கின்றன. இக்கோவிலின் தல விருட்சகம் கடம்ப மரம். தீர்த்தம் பொற்றாமரை குளம் மற்றும் வைகை. பல நூறு வருடங்களுக்கு முன் இங்குள்ள பொற்றாமரைக் குளத்தில் கிடைக்கப்பெற்ற ஸ்படிக லிங்கம். இன்றும் மதுரை ஆதீனத்தில் வழிபாட்டில்உள்ளது. இறைவனின் 5 சபைகளில் இத்தலம் வெள்ளி சபை.மற்ற எல்லா இடங்களிலும் இடது காலைத் தூக்கி நடனமாடும் நடராஜர். இங்கு வலது காலைத் தூக்கி வைத்து நடனமாடுகிறார். இந்த சந்நிதியே வெள்ளியம்பலம் எனப்படுகிறது.

# திருவண்ணாமலை

- வ. இளவரசி

| | | |
|---|---|---|
| இறைவர் திருப்பெயர் | : | அருணாசலேஸ்வரர், அண்ணாமலையார் |
| இறைவியார் திருப்பெயர் | : | அபீதகுஜாம்பாள், உண்ணாமுலை |
| தல மரம் | : | மகிழம் |
| தீர்த்தம் | : | பிரமதீர்த்தம் |
| வழிபட்டோர் | : | விசுவாமித்திரர், பதஞ்சலி, வியாக்ரபாதர், அகத்தியர், சனந்தனர் அகியோர் |
| தேவாரப் பாடல்கள் | : | 1. சம்பந்தர் - 2<br>2. அப்பர் - 3 |

தல வரலாறு

பஞ்சபூத தலங்களுள் நெருப்புக்குரிய தலம்

இங்கு மலையே இறைவனின் சொரூபம்

வல்லாள மன்னனுக்கு மகனாக வந்தவதரித்து இறைவன் அருள் செய்த பதி இதுவே.

சிறப்புக்கள்

b கார்த்திகை தீப பெருவிழா, இத்தலத்தில் மிகவும் சிறப்புடையது.

b உயர்ந்தோங்கிய அருணாசலத்தின் - அண்ணாமலையின் அடிவாரத்தில் கோயில் உள்ளது.

b நினைக்க முத்தியருளும் நெடும் பதி

b அருணகிரி நாதரின் வாழ்வில் அருள் திருப்பம் ஏற்படக் காரணமாக இருந்த பதி.

b ரமண மகிரிஷி தவம் இருந்து அருள் பெற்ற தலம். (ரமணர் ஆசிரமம் இத்தலத்தில் உள்ளது)

b இத்திருக்கோயிலின் கிழக்குக் கோபுரம் 217 அடி உயரம் - தமிழகத்திலேயே உயர்ந்து விளங்குகிறது. தெற்கு கோபுரம் - திருமஞ்சன கோபுரம், மேலக்கோபுரம்- பேய்க் கோபுரம், வடக்குக் கோபுரம் - அம்மணியம்மாள் கோபுரம் என்றழைக்கப்படுகிறது.

b யாத்ரிகர்களுக்குரிய சத்திரங்கள், திருக்கோயில் விடுதிகள் முதலியவை உள்ளன.

b மலைவலம் (கிரிவலம்) இங்குச் சிறப்புடையது.

b கிழக்கு கோபுரத்தில் நடனக் கலையும் பிறவுமாகிய சிற்பங்கள் ஏராளமாக உள்ளன.

b கோயிலுள் நுழைந்தவுடனே சர்வசித்தி விநாயகருக்கு வலப்பால் உள்ள பாதாள லிங்கேஸ்வரர் சந்நிதி - ரமணர் தவம் செய்த இடம் ; தரிசிக்கத் தக்கது.

b உள்ளே சென்றால் கம்பத்திளையனார் சந்நிதியும், ஞானப்பால் மண்டபமும் உள்ளன. அதலசேடனாராட என்னும் திருப்புகழுக்கு முருகன் கம்பத்தில் வெளிப்பட்டு அருள் செய்த சந்நிதி.

b வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் முருகப்பெருமானுக்குச் சார்த்திய வேல் இன்றுமுள்ளது.

b சுப்பிரமணிய சந்நிதியில் பாம்பன் சுவாமிகளின் குமாரஸ்தவக் கல்வெட்டுள்ளது. அருகிலேயே அருணகிரிநாதரின் திருவெழுகூற்றிருக்கை

வண்ணத்தில் சலவைக் கல்லில் பொறித்துப் பதிக்கப்பட்டுள்ளது.

b அம்பாள் சந்நிதியில் சம்பந்தர் பதிகம், பாவை, அம்மானைப் பாடல்களின் கல்வெட்டுக்கள் உள்ளன.

b விசுவாமித்திரர், பதஞ்சலி, வியாக்ரபாதர், அகத்தியர், சனந்தனர் முதலானோர் வழிபட்ட லிங்கங்கள் உள்ளன.

b மூலவர் - அருணாசலப் பெருமாள், தங்கக் கவச நாகாபரணத்துடன் வைர விபூதி நெற்றிப்பட்டம் ஜொலிக்க காட்சித் தருகிறார்.

b 25 ஏக்கர் நிலப்பரப்பில் ஏழு பிரகாரங்களுடன் அமைந்துள்ள இத்திருக்கோயில் (திருவாசகத்தில்) திருவெம்பாவை பாடப்பட்ட சிறப்பினை உடையது.

b நாடொறும் ஆறுகால வழிபாடுகள் நடைபெறுகின்றன.

b தலபுராணம் - அருணாசல புராணம், அருணைக் கலம்பகம், சைவ எல்லப்ப நாவலர் பாடியுள்ளார்.

b அண்ணாமலை வெண்பா குருநமசிவாயர் பாடியது.

b குருநமசிவாயர், குகைநமசிவாயர், அருணகிரியார், விருபாக்ஷதேவர், இசான்ய ஞானதேசிகர், தெய்வசிகாமணி தேசிகர் முதலியோர் இப்பதியில் வாழ்ந்த அருளாளர்கள்; இவர்களுள் பெரும் யோகியாகத் திகழ்ந்த தெய்வசிகாமணி தேசிகரின் வழியில் வந்த நாகலிங்க தேசிகர் என்பர் இராமேஸ்வரத்திற்கு யாத்திரையாகச் சென்றபோது, இராமநாதபுர ராஜா சேதுபதி அவர்களின் வேண்டுகோளையேற்று, இராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சேர்ந்த ஐந்து கோயில்களின் நிர்வாகத்தைத் தாம் மேற்கொண்டதோடு குன்றக்குடியில் திருவண்ணாமலை ஆதீனம் என்ற பெயரில் ஓர் ஆதீனத்தையும் ஏற்படுத்தினார்; அதுவே குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் என்று வழங்கப்பட்டு வருகின்றது.

b நூற்றுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் இத்தலத்தில் படியெடுக்கப்பட்டுள்ளன. இவை தமிழ், சமஸ்கிருதம், கன்னட மொழிகளில் உள்ளன. (கல்வெட்டுக்களின் விவரத்தை ஆலயத் தல வரலாற்று நூலில் விரிவாகக் காணலாம்).

b இக்கோயிலின் சிறப்பைப் பற்றிப் பாடியோரும் நூல்களும் : நமசிவாய சுவாமிகள் - சார பிரபந்தம், திருச்சிற்றம்பல நாவலர் - அண்ணாமலையார் சதகம், (காஞ்சிபுரம்) பல்லாவரம் சோணாசல பாரதியார் - அண்ணாமலை கார்த்திகை தீப வெண்பா, சோணாசல வெண்பா, திருவருணைக் கலிவெண்பா, சோணாசல சதகம், வடலூர் இராமலிங்கசுவாமிகள் - திருவண்ணாமலை திருவருட் பதிகம், புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் - அருணாசலேஸ்வரர் பதிகம், காஞ்சிபுரம் சபாபதி முதலியார் - அருணாசலபதிகம், யாழ்ப்பாணம் - நல்லூர் தியாகராஜப்பிள்ளை - அண்ணாமலையார் வண்ணம், இவையன்றி; உண்ணாமுலையம்மன் பதிகம், உண்ணாமுலையம்மன் சதகம், அருணாசலேஸ்வரர் அக்ஷரமாலை, அண்ணாமலை பஞ்சரத்னம் அருணாசல நவமணி மாலை, அருணாசல அஷ்டகம் அருணைக் கலம்பகம், தீரவருணை வெண்பா முதலிய நூல்களும் உள்ளன.

b வள்ளல் பச்சையப்பர் இக்கோயிலில் அர்த்த சாமக் கட்டளைக்கு ஒரு லட்சம் வராகன் வைத்துள்ள செய்தியைத் தெரிவிக்கும் கல்வெட்டொன்று

# வாழ்ந்த இடங்கள், வளர்ந்த இடங்கள், வளர்த்தவை, வாழ்வித்தவை

- அ.ச.கார்த்திக்பாரதி

## வாழ்ந்த இடங்கள்

கரும்பாலை தெருக்கள்
திரு.சிவசுப்ரமணிய முதலியார் இல்லம், கோரிப்பாளையம்
திருமிகு. பாண்டியன் - இலட்சுமி இல்லம், மானகிரி
Dr.தாஜ் இராஜப்பா இல்லம், கே.கே.நகர்
ஸ்ரீ அன்னை.அரபிந்தோ, ஆரோவில்

## வளர்ந்த இடங்கள்

பட்டுப்பூச்சி பள்ளி வளாகம்
சௌந்தர் பள்ளி வளாகம்
ரயில்வே காலனி மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி
உறுதுணை இயக்கம்

## வளர்த்தவை

அப்பா, அம்மாவின் அயரா உழைப்பு
மகாபாரதம்
அம்மாவின் கலெக்டர் கனவு
பிரபு சலூன் கடை, கரும்பாலை
விஜயா டீக்கடை, கரும்பாலை
காந்தி மியூசிய நூலகம்
தல்லாகுளம் நூலகம்
அறிவொளி இயக்கம்
கலை இலக்கிய விழாக்கள்
அமெரிக்கன் கல்லூரி வளாகம்
அமெரிக்கன் கல்லூரி NSS
தமிழக அரசு சத்துணவுத் திட்டம்
தமிழ அரசு கல்வி உதவித்தொகைகள்
அரிக்கன் கல்வி மதிய உணவுத்திட்டம் 1998-2000

## வாழ்வித்தவர்கள்

அறிவொளி இயக்க கற்போர்கள்
1999-2004 மதுரை சீடு தொண்டர்கள
ஆடம்ஸ், மெல்லியல் அண்ணாமலை, அண்ணாமலை, கிறிஸ்டின் அக்கா, ஹீனா அக்கா, கௌதமன், மன்சூர், G.சுரேஷ்குமார், K.கணேஷ்குமார் MSW, பாரிகணேசன், அருள்தாங்கராஜ், பாரிகணேசனின் நண்பர்கள், சந்திரமோகன், சந்திரமோகனின் நண்பர்கள், லௌரா வில்லிகர், ஜான் பாட்ஸ், பிரபாகர் வேதமாணிக்கம் தம்பதிகள், எவாஞ்சலின் மனோகரன் தம்பதிகள், ஈவ்லின் மாசிலாமணி, ஆசிரியை மாரியம்மாள், ஆசிரியை செல்வி, Friends of Madurai Seed, Kanton School, Honey well company, அன்னமரியாள், கணேஷ் ராமரத்தினம் நண்பர்கள், OUP, Ann, Dr.Isabel, Vidiyal



டாக்டர் தாஜ் தமது குழுவினருடன்



கரும்பாலையின் கல்விபுரட்சியின் துவக்கப் புள்ளிகள்
மல்லிகா, சின்னமாரி மற்றும் கார்த்திக்

# எனது பள்ளி, கல்லூரி ஆசிரிய பெருமக்கள்

- அ.ச.கார்த்திக்பாரதி

**பட்டுப்பூச்சி ஆரம்பப்பள்ளி (I to V)**



திருமிகு. செல்லம் (தலைமையாசிரியர்)
திருமிகு. பேச்சியம்மாள்
திருமிகு. புஷ்பவள்ளியம்மாள்
திருமிகு. ஜெயலெட்சுமி
திருமிகு. சுலோக்சனா (முன்னாள்தலைமையாசிரியை)

**செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி (VI to X)**

திருமிகு. மாரியம்மாள் (தலைமையாசிரியை)
திருமிகு. சாந்தி (முன்னாள் பொறுப்பு தலைமையாசிரியை)
திருமிகு. செல்வி (முன்னாள் பொறுப்பு தலைமையாசிரியை)
திருமிகு. ராஜாத்தி சுந்தர வசந்தா
திருமிகு. பார்வதி
திருமிகு. விஜி
திருமிகு. கீதா பொன்மலர்
திருமிகு. பிரேமா
திருமிகு. லூயிஸ்
திருமிகு. நாகராஜம்
திருமிகு. ஜெயா. அமுதா (சத்துணவு பொறுப்பாளர்கள்), தனக்கா. சித்தன்

**ரயில்வேகாலனி மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி (XI & XII)**



திருமிகு. சேது (தலைமையாசிரியர்)
திருமிகு. பரமசிவம் (தமிழாசிரியர்)
திருமிகு. பஞ்சாட்சரம்
திருமிகு. எஸ்தர்
திருமிகு. ஷீலா
திருமிகு. ராபர்ட்
திருமிகு. இயற்பியல் ஆசிரியர்
திருமிகு. இராஜபாண்டியன்

**அமெரிக்கன் கல்லூரி (B.A., M.A.)**

**Prof. J.C.B. Abraham**
**Prof. D.Peter Jayapandian**
**Prof. Samuel Sudanandha**
**Prof. P.Samuel Lawrence**
**Prof. V.Swaminathan**
**Prof. K.Elangovan**
**Prof. T.N.Pranatharthi Haran**
**Prof. J.A.Gladston**
**Prof. S.Pothireddy**
**Prof. P.A.M.Manimaran**
**Prof. K.Alagesan**
**Prof. A.SomaSundaram**
**Prof. J.Sarojini**
**Prof. P.Glory Ponmoli**
**Prof. J.Evanjaline Manoharan**
**Prof. R.Prabhakar Vedamanikam**
**Prof. R.Velmurugan**
**Prof. S.VenuGopal**
**Prof. Velmurugan (Junior)**
**Prof. Barnabas (SSC)**
**Prof. Silas Ebenezer (SSC)**
**Prof. S.Rajkumar Immanuel (BOT)**
**Prof. J.Karunyal Samuel (BOT)**
**Prof. Robson Benjamin (PHY)**
**Prof. S.Stephen (MAT)**
**Prof. G.C.Abraham (NSS)**
**Prof. Raju (NSS, MKU)**



**மதுரை காமராசர் பல்கலைக்கழகம் (M.Phil.,)**

**Dr. Sethumaniyan**
**Dr. Evanjalin Manoharan**

**ஆங்கில ஆசிரியர்கள்**

**Dr. Adams**
**Dr. Laura Villiger & John Potts**

# மணமகனின் சகோதரி மகன், மகன்கள்



| | |
|---|---|
| V.மருதநாயகம் Ph.D. | திருச்சி |
| V.செல்லம் | புலியூரான் |
| R.சுகன்யாதேவி B.Sc., | தெற்குமாசிவீதி |
| V.நித்யா. பாலமுருகன் | புலியூரான் |
| V.திவ்யபாரதி | கரும்பாலை |
| R.கௌதம்ராஜா | தெற்குமாசிவீதி |
| N.ஐஸ்வர்யா | வடக்குமாசி வீதி |
| R.காவ்யா | தெற்குமாசி வீதி |

# மணமகனின் சகோதரி, மகளின் மகள்

B.சுசீத்ரா



மதுரை சீடு கனவுகள் அரங்க பெண் குழந்தைகள் 2008-2009

# திருமண ஏற்பாட்டுக்கு

| | | |
|---|---|---|
| திருமண மண்டபம் | : | இந்திரா ஈஸ்வர் மகால்.தல்லாகுளம். 2527556 |
| மணவினை ஆசான் | : | சைவத்திரு திருஞானசம்பந்தம். வெள்ளக்கோவில் 99429-03361 |
| விருந்து | : | A.பால்ராஜ் 2521408 |
| பந்தல் | : | R.ரமேஷ். 96005-39452 |
| மின்விளக்கு ஒலிபெருக்கி | : | R.பாலமுருகன் 93603 84367 |
| மாப்பிள்ளை கார் | : | ராஜா. சிம்மக்கல் |
| மாங்களவாத்தியம் | : | மணிகண்டன். திருப்பரங்குன்றம் |
| பேண்டு வாத்தியம் | : | பாண்டி 99941-10124 |
| டிராவல் கார் | : | காசி - 99941-10124<br>மணி - 99944-96828 |
| திருமண தாம்பூல பை | : | சிவா. ஸ்கிரீன் - சுவாமி சன்னதி |
| திருமண அமைப்பாளர் | : | ரவி<br>உமா - தலையாரி குருநாதன் கோயில் |
| வீடியோ | : | KR.செந்தில்குமார்.<br>RSK போட்டோ கிராப்ஸ். 98421 86436 |
| பலசரக்கு சாமான் | | |
| மணமாலை | : | ஆனந்தன். 98435 23804 |

அச்சிட்டோர்- திருமண அழைப்பிதழ் - Stencil Cards 94437 17823

| | | |
|---|---|---|
| அச்சிட்டோர் | : | திருமண மலர் & புதுயுகம் இதழ்கள்<br>முத்தன் பிரிண்டர்ஸ்<br>4361610 |
| நாட்குறிப்பு<br>மற்றும்<br>ஜாதக நம்பிக்கைகளுக்கு | : | பாலாஜி |

விஷம் என்று சொல்லி
சர்க்கரையை நீரில் கரைத்துக்
கொடுத்தால் அதனால் கேடு
உண்டாகாது. நஞ்சினைக்
கரும்புச்சாறு என்று
எண்ணிக் குடித்தாலும்
அது நம் உயிரைக் குடித்துவிடும்.
அதனால், எண்ணங்களைக்
காட்டிலும் செயல்களே
முக்கியமானதாக
இருக்கிறது.



## மதுரை சீடு ASKB விருது வழங்கும் விழா - 2004



## மதுரை சீடு ASKB விருது வழங்கும் விழா - 2005




மணமகன் குடும்பத்தினர்

# MADURAI SEED FAMILY



M.Magudapathi B.E.
N.Ramachandran B.A.
O.Manikandan B.E.
M.Marimuthu B.A.
G.Vijay B.E.
M. Periyasamy B.E.
M.Ashok B.E.
M.Sivagurunathan B.A.
P.Saravanakumar B.E.
M.Sureshrajan B.A.
P.Manikandan B.A.
R.Baskarraja B.Sc.,
K.Muthupandi B.Com.
C.Premkumar B.A.
K.Azhagiri B.A.
A.Bisarkhan B.B.A.
M.Maruthupandi B.E.
M.Mansurali B.sC.

C.Arunkumar B.A.
R.Rasic Ahamed B.Com,
S.Murugapandi B.A.
S.Sulthan Alautheen I.T.I.
K.Anbarasan M.A.
P.Muniyasamy B.A.
O.Mohan B.A.
P.Pandiyarajan B.A.
M.Manickaraj
N.Nagalakshmi
C.Karpagajothi B.A.
M.Thangalakshmi B.A.
Dr. Laura Villiger Ph.D.
V. Elavarasi M.Sc.,
P.Saranyadevi B.Sc.,
M.Amutha, B.A.
A.S.Karthikbharathi M.A., M.Phil.,
P.Radhakrishnan



Miss. V.Mariyammal



Dr. Melli Annamalai

வாழ்த்துக்களுடன் ஸ்ரீ முத்தன் பிரிண்டர்ஸ், மதுரை-2. செல் : 9865935571